12867

# மருதன் அஞ்சலோட்டமும்

# புலவர் வரலாறும்

வெளியிட்டவர் :

**வே. க. ப. நாதன்**

கொழும்பு.

உ

திருச்சிற்றம்பலம்

# ருதன் அஞ்சலோட்டம்


யாழ்ப்பாணத்து,

லியூர், க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்



கொழும்புத்துறையூர்

வே. க. ப. நாதன் அவர்களால்

வெளியிடப்பட்டது.


புரிமைபெற்றது] 1953 [விலை ரூ. 2-0-0

First Edition —1953

Printed at the Excelsior Power Press, Madurai
and published
By
V. K. P. NATHAN
Editor, "THINAKARAN",
Colombo, (Ceylon).

Copyright reserved with the Publisher.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | .... 1-10 |
| 2. | புலவர் வரலாறு | |
| | 1 பிறப்பு | .... 1 |
| | 2 கல்விப் பயிற்சி | .... 5 |
| | 3 செய்யுளியற்றல் | .... 10 |
| | 4 ஆசிரியராதல் | .... 14 |
| | 5 குருவருட்பேறு | .... 17 |
| | 6 மணவினையும் பெரியோர் நட்பும் | .... 21 |
| | 7 தெய்வ வழிபாடும் நூல்களும் | .... 26 |
| | 8 புலவர்ப் பட்டமும் உயர்நிலைக் கல்வியும் | .... 31 |
| | 9 பொற்கிழி பெறுதல் | .... 41 |
| 3. | மருதன் அஞ்சலோட்டம் | .... 45 |

# முன்னுரை

"சோபனஞ் சோபனஞ் சோபனமே சுப
சோபனஞ் சோபனஞ் சோபனமே
நாவளஞ் சேர்கவி வாணர் துதிசெய
நாடு சுதந்திர மானதுவே.

* * * * *

ஓராயி ரத்துத்தொள் ளாயிரத்து நாற்பான்
ஓரெட்டா மாண்டுயர் கும்பமதி
சீரான நாலாந் தேதி சுதந்திரச்
செங்கதிர் வந்துதி கழ்ந்ததுவே!"

ஆண்டு ஒன்று நிறைவானது. ஆட்சியாளர் ஓட்டம் வைத்தனர். மருதன் அஞ்சல் ஓட்டம். "வெற்றிகொண் டோம்! விழாவணி செய்யுங்கள்!! என்று பண்டு யவன வீரன் கூறியதை நினைவுறுத்தும் ஓட்டம்.

ஆக்கம் விரும்பிய ஆட்சியாளர் புலவர்களிடம் பாடல் கேட்டனர். தமிழ்ப்புலவர்களும், சிங்களப் புலவர்களும் பாடினர். நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்களும் "மருதன் அஞ்சலோட்ட வரலாறு தமிழ் செய்தார்" —தமிழரும், தமிழ் மக்களும் வாழப் பாடினார்.

நரைத்து நீண்ட வெள்ளிக் கம்பிக் கற்றை போன்ற தாடியும், விரித்துடுத்த வேட்டியும் எங்கோ பறந்துவிட் டன. கொடுக்குக் கட்டிவிட்டார். பாடும் புலவர் ஓடும் ஒருவராக மாறி விட்டார். காளைப் பருவமும் அடைந்து விட்டார். தாம் ஓடுவதன்றிப் பிறரையும்,

"மருத னஞ்ச லோடுவோம்!
மருத னஞ்ச லோடுவோம்!!"

என்று அழைக்கின்றார்.

செவி சாய்க்காதிருக்க முடியுமா? வம்மின்! அவரைப் பின்பற்றுவோம்.

ஓட்டம் எதற்கு? புது யுகம் அமைப்பதற்கு—தம்மைத்தாமே ஆள்வதற்கு. இதற்கு அத்தியாவசியகம் ஆண்மை. ஆண்மை உள்ள இடத்தில் தாழ்மை (பணிவு) இருக்கவேண்டும். இவையெவை யிருந்தும் மானம் இல்லையேல் வாழ்வும் ஒரு வாழ்வா? எனவே, ஆண்மை தாழ்மையோடு மானமும் வேண்டும். என்றாலும் ஆக்கத்தைக் காணவில்லையே! ஓகோ அந்த ஊக்கம் என்னும் உரனை மறந்துவிட்டோம்; சேர்த்துக்கொள்வோம்:

"எடுத்த காலி லாண்மையும்
இட்ட காலிற் றாழ்மையும்
மடுத்துப் பிடித்த கைகளில்
மான மூக்கம் பூண்டுநாம்"

ஓடுவோம். இனி ஓட்டத்திற்கு என்ன குறை?

"தேனைப்போ லினிக்கும்" விடுதலைச் செய்திகொண்டு சில தூரம் ஓடிவிட்டார்கள். வாலிப வீரருக்கு மனவெழுச்சியும், சுதந்திரத் தாகமும் வீறுகொள்ளுகின்றன. பரவச நிலையை எய்திவிட்டனர். புலவர் முன்னின்று ஓடுகின்றார். சட்டெனத் தமது நடையை மாற்றிவிட்டார்:

"மண்ம திக்க விண்ம திக்க
மாதி ரம்ம திக்கவே
வலிமி குந்த மறுபு லத்து
மன்ன ரும்ம திக்கவே

எண்ம திக்கு மீழ மக்கள்
யாவ ரும்ம திக்கவே
ஏன்ற மருத னஞ்ச லோட்ட
மின்று யாங்க ளோடுவோம்!"

என்று ஓசை நயம்பட நிமிர்ந் தாடி ஓடுங் குறிப்புணர்த் துஞ் சந்தம் பெற இசைக்கின்றார்.

ஓடும் வழியிற் களைப்புத் தோன்றிவிட்டது. பயப்ப டாதீர்கள்! மக்களுக்கு மாத்திரமன்று விடுதலை. ஐயறிவு கொண்ட மாக்களுக்கும் விடுதலைதான்! அதோ பாருங்கள்!

"மரகதக் கலாபம் வீசி
மயில்க ளாடு மழகுபார்!
மந்தி வந்து குந்தி யுந்தி
மரத்திற் பாயும் வடிவுபார்!"

என அயலிலுள்ள காட்சிகளைக் காட்டி வைக்க "மிட்டாய்" அளிக்கின்றார்.

ஆகா! மாமரங்கள் இலையுதிர்ந்து நிற்கின்றனவே! ஓர் உண்மை உதித்து விட்டது. காலம் மாறினமையாற்றான் நம்மை ஆங்கிலர் விட்டுச் சென்றனர். அதை மாமரத் தோடு பிணைத்துவிட்டார் புலவர்:

"பலமு யர்ந்த வாங்கி லர்க்கெம்
பாரிற் பற்றுப் பறிதல்போல்
நிலையு யர்ந்த மாம ரங்கள்
இலை யுதிர்ந்து நிற்றல்பார்!"

இங்கு வளனும், வரலாறும் ஞாபகத்தில் வந்துவிடுகின்றன. பக்கத்தே உள்ளவர்களை,

"...............................எமக்கு
மொழி குதிர் கேட்டிடத் தோழர்களே;"

*எனக் கேட்கின்றார். வேத வியாசனைப்போலச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்க அவர்களால் முடியுமா? எனவே தாமே உரைக்கின்றார். கேளுங்கள்:*

"விசும் பேறு மலைதோறும்
பசுங் கொண்டல் கூடும்
விழி குளிர மயிலாடும்
குயில் மதுரம் பாடும்
தசும் பேறு துடிதுவள
நடை தளர வள்ளி
தமிழ் முருக னோடுவிளை
யாடி மகிழ் நாடு!"

*எங்களை அறியாமலே நாங்களும் பாடுகின்றோம். வாய்க்குள் சம்பந்தரின்,*

"வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவை யாறே!"

*என்ற தேவார அடிகளும் வந்துவிடுகின்றன. அது திருவையாறு. இது கதிர்காமம்.*

*இதோ விசயன் வந்துவிட்டான். பாண்டியன் மகளை விவாகமுஞ் செய்துவிட்டான். சிங்களமும் தோன்றி விட்டது.*

"ஆரிய பாடையை அப்ப னருளினன்
அருந்தமிழ்ப் பாடையை அன்னை தந்தாள்

சீரிய பாடைக ளோரிரண் டுங்கொண்டு
சிங்கள பாடையோன் றுனதுவே "

சிங்களர் சமயம் பௌத்தம். பௌத்தத்திற்கும் இலங்கைக்கும் நீண்ட தொடர்புண்டு. பௌத்த கலாசாரம் வெள்ளரசைப்பற்றியே நிற்கின்றது. சைவ கலாசாரம் கல்லால விருட்சம்—குருந்தமரம்—பற்றி நிற்கின்றது. கல்லால்—நால்வர் முனிவருக்கு உபதேசம்; குருந்தமரம் —மாணிக்கவாசகருக்கு உபதேசம். சுதந்திர இலங்கையில் வெள்ளரசு புத்தருக்கு உபதேசம்.

" ஒற்றுமைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
உறுதுணைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
வெற்றிக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
வேல்விழியாள் நாட்டிவைத்த
வெள்ளரச மரமே "

வெள்ளரசுமரம் ஓங்குவது அநுராதபுரம். அது வேந்தர் தலைநகருமுமாம். ஆங்குச் சிங்களவர், தமிழர் மாறி மாறி ஆட்சி செய்தனர். இரு சாதியினரும் தங்கள் மரபுப் பண்பை இழக்கவில்லை. நடுநிலை நின்று சரித்திரம் செப்புகின்றார் புலவர்.

மேலை நாட்டவர் வருகின்றனர்; செல்கின்றனர். இருபத்தைந்து ஆண்டுகளாகச் சுதந்திரத்துக்கு உழைக்கின்றனர் தமிழர், சிங்களவர். சுதந்திரச் செஞ்ஞாயிறும் உதித்தது.

" ஆனந்தச் சேவல்க ளெங்கெங்கும் கூவின
அடிமை வறுமைக ளந்தரம் போயின
ஊனந் தவிர்ந்தது சுதந்திரச் சூரியன்
உதித்தன னுள்ளங் குளிர்ந்ததுவே!"

*நாடெங்கும் கொண்டாட்டம். கொழும்பு மாநகர்க் கொண்டாட்டம் காண்மினே! வீரர் காட்சி பார்மின்! போர் வீரர் செல் நடையிற் புலவீரர் செல்முறையினைக் காண்மின்!*

" இசைக்குப் பொருந்தச் சதித்து மிதிக்கு
மெழில்கொள் நடையு மிடையிலே
எடுத்துத் தொடுத்த கடுத்த சுரிகை
ஏந்து கரத்து வெடிக்குழல்
அசைத்துக் கொடுத்து நெளித்து வளைத்துக்
களித்துத் திளைத்துச் சுதந்திரம்
ஆடிப் பாடி வீரர் நகரும்
ஆர வாரம் பார்மினே!

*இவ்விடத்தில் நமக்கு மதுரைக் காஞ்சி நினைவு வருகின்றது :—*

" கல்லு மரனுந் துணிக்குங் கூர்மைத்
தொடலை வாளர் தொடுதோல் அடியர்
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடிச்
சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூ லேணிப் பன்மாண் சுற்றினர்
நிலனகழ் உளியர் கலனசைஇக் கோட்டுங்
கண்மா றுடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்

துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கோள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் ''

*அஃது அந்தக்காலம். இஃது இந்தக்காலம்.*

*சற்றுத்தூரம் செல்வோம்! ஆடவர் பந்தாடுகின்றனர். பெண்டிரும் ஆடுகின்றனர். அணுவும் கலைத்திறன் பிழையாது அரமகளிர் இவரோ என ஆடுகின்றனர்; சொக்கிவிடுகின்றோம்.*

'' கரிய முகிலின மனைய புரிகுழல்
கலைய விழியயி லுலையவே
கலப மயிலென நடன விதமோடு
கமல பதயுக முகளவே
அரிய கலைமுறை பயிலும் விதிமுறை
யணுவு மொருபிழை யகலவே
அவனி வருமர மகளி ரிவரென
அறையு மழகிய ராடல் பார்!

*  *  *  *  *  *  *

மதிய மெனவுரை வதன நுதலினில்
மணிகொள் தரளநல் வடமென
மருவு வெயர்வுற விழிகள் சுலவுற
வனச வளவிதழ் ஒளிவிடச்
சதிகொள் நடைபயில் சரண முளைவுறத்
தனது பகுதியும் விறலுறச்
சலச மகளென வுரைகோ ளழகியர்
தமது திறனுட னுடல் பார்! ''

*கொங்குவேள்மாக் கதை,*

'' வந்தரி வையரெதிர் வரச்சதி வகையாற்
பந்தா டிலக்கண நின்றுபல பேசி ''

என்கின்றது. "சதிவகையாற்" — "சதிகோள் நடைபயில் சரணம்"; இச்சொற்றொடரில் பெண்டிர் பந்தாடுங்கால் சதிமுறையில் (தாளவொற்றறுத்துத் தாள் பெயர்த்தல்) பயின்றுடும் உண்மை காண்கின்றோம். ஆயுங்கால், புலவர் பன்னூலும், பலகலையும், பலகாலும் பயிலுந்திறன் மிளிரத் தரச் செய்யுள் யாக்கும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர் என்பது தேற்றம்.

இனிச் சுணங்காதே வாருங்கள் சுதந்திரம் பாட! உடையிலும், நடையிலும் எவரையும் பணியாதீர்கள்! படைப்பயிற்சி, கலைப்பயிற்சிக்கும் இனி எவரிடமும் அணுகாதீர்கள்!

ஆனால் ஒற்றுமைப் பயிரை வளருங்கள்!

"அஞ்சு விரலுஞ் சேர்ந்திடில்
அரிய கருமம் புரியலாம்
கொஞ்ச மொன்று நோவுறிற்
கூடுங் கரும மில்லையே!"

ஒற்றுமை மட்டும் போதாது; ஆக்கத்திற்கு உடலுறுதியோடு ஒழுக்கமும் வேண்டும்.

"நல்லொ ழுக்க மெம்முயிர்
நன்றி நல்குங் கற்பகம்
நல்லொ ழுக்க முள்ளவர்
நாட்டிற் புனித தேவரே"

ஆனால் நாமே தேவர் என்று இறுமாப்புக்கொண்டு விடாதீர்! சொன்னேன் எச்சரிக்கை.

"பொய்யும் புளுகும் பேசியே
புரட்சி நாட்டிற் செய்துபின்

தெய்வங் கொல்லும் கொள்கையர்
　　தேம்பி நின்று சாம்பவே ”

*செய்வன செய்தால் சிறப்பு மிகும். உய்வகை உறுதியும் வாழ்வழியாகும். களிமீக்கூர்கின்றது; அறவுரை அறிவுரை செய்கின்றார் புலவர்:*

“ காடு கொன்று வாவி தோட்டு
　　மேழிச் செல்வம் காண்குவம்
கழனி தோறும் விளைவுகண்டு
　　கலத்தி லேற்றி யுலகிலே
நாடுந் துறைக ளோடிச் சென்று
　　நல்ல நிதியங் கூட்டுவம்
நலிக்கும் பஞ்சங் கெஞ்சியோட
　　நாட்டிற் றேழிலுங் காட்டுவம்.

* * * * * * *

“ கீழை நாட்டுத் தெய்வக் கலையும்
　　கிளரும் மேலைக் கலைகளும்
கேடி லெங்கள் சமய வாய்மை
　　கிளக்கு ஞான தத்துவம்
வாழி தமிழிற் சிங்களத்தில்
　　வளரு மிரண்டு கழகங்கள்
வடபால் தென்பா லமைக வென்று
　　வாழ்த்துக் கூறியோடுவம் !”

*நாமும்*

“ புவியினுக் கணியாய் ஆன்ற
　　பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
　　ஐந்திணை நெறி அளாவிச்

சவியுறத் தெளிந்து தண்ணெனன்
றொழுக்கமுந் தழுவிய சான்றோர்
கவியை,

*வாயார மனமார வாழ்த்துவம்.*

குறிப்பு :—அஞ்சல் ஓட்டமும், பரிசில் வேட்கை ஆரவாரமும் ஓய்ந்தன. புலவரின் புத்திரர் பண்டிதர் இளமுருகனார் அவர்கள் இப்பாக்களை எனக்கு அனுப்பி வைத்தார். படித்தேன். பலமுறை படித்தேன்-பரிசில் கடா நிலைக்குப் பாடிய பாட்டுக்கள் அல்ல இவை. வையம் உள்ளளவும் நிலைபெறும் தெய்வ நிலைத் தன்மை வாய்ந்த இச் செந்தமிழ்ப் பாக்களை, என் அகத்தெழுந்த ஆசையினாற் பதிப்பித்துள்ளேன். அச்சேறிய இப்பாக்கள், சுதந்திர இலங்கை மக்களின் ஆவியிற் கலந்து, ஆக்கப் பணிகள் புரிய அவர்களை ஊக்குகின்ற மங்கலத் திருநாளை வரவேற்கின்றேன்.

" பொய்கையகம் "
மக்கலம் வீதி, கோட்டை,
கொழும்பு
4—2—52

வே. க. ப. நாதன்,
ஆசிரியர்
" தினகரன் "

### நவாலியூர்ச்

# சோமசுந்தரப் புலவர் வரலாறு

(வே. க. ப. நாதன்)

## அத்தியாயம் 1

## பிறப்பு

### பிறப்பிடம்

சோமசுந்தரப் புலவர் பிறந்தவூர் நவாலி. அது யாழ்ப்பாணத்து வலிகாமம் மேற்கிலுள்ள மானிப்பாய்க் கோயிற் பற்றைச் சார்ந்தது. அது மருதமும் நெய்தலுங் கலந்த நிலப் பகுதியை யுடையது. வாழை, மா, பலா, தென்னை, கமுகு முதலியன அங்கே செழித்து வளரும். பல்லாண்டுகளாக அது கல்விச் சிறப்பிலுஞ் செல்வப் பெருக்கத்திலும் மேம்பட்டு விளங்கி வருகின்றது. அதன் கிழக்குப் பகுதியில் முருக மூர்த்தி திருக்கோயிலும் சிந்தாமணிப் பிள்ளையார் திருக்கோயிலும், வடக்கில் அட்டகிரி முருகவேள் கோயிலும் மேற்கில் கண்ணகியம்மன் கோயிலும், தென்புறத்து எல்லையில் நரசிங்க வைரவர் திருக்கோயிலும் விளங்குகின்றன.

செழிப்பான வயல் நிலங்களும் பசும்புற்றரைக்ளும் பனந்தோப்புக்களும் கிராமத்தை யழகுபடுத்துகின்றன. வேனிற்காலத்திலே களையோடைக் கண்ணகியம்மன் கோயிலைச் சூழ்ந்த வெளிப்புறங்களும் சிறு பற்றைக் காடுகளும் நல்ல காட்சியைக் கொடுக்கும். மாலை மதியமும், வீசு தென்றலும், செக்கர் வானமும் அக் காட்சியை யழகுபடுத்தும்.

## குடிப்பிறப்பு

வன்னிய சேகர முதலியார் என்பவர் ஒருவர் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னே நவாலியிற் குடியேறிச் சீருஞ் சிறப்புமுற வாழ்ந்து வந்தார். அவருடைய ஒன்பதாவது தலைமுறையிலே அருமையினர் என்று வழங்கும் ஆறுமுகம் பிள்ளை பிறந்தார். அவருக்குக் **கதிர்காமர்** என்னும் புதல்வர் பிறந்தார். கதிர்காமருக்கு மூத்த புதல்வராகப் புலவர் பிறந்தார். பரம்பரையாகத் தமிழ்க் கல்வியிலும் சைவாசாரத்திலும் இக் குடி மேம்பட்டு வந்தது.

## தந்தையுந் தாயும்

அருமையினர் கதிர்காமர் **இலக்குமிப் பிள்ளை** யென்பவரை மணம் முடித்தார். இலக்குமிப்பிள்ளை யென்பவர் கோண்டாவிலடிச் சிங்கைநாயக முதலியின் வழித்தோன்றலாகிய **விஜசித் தம்பி** யென்பவருக்கு மகள். இலக்குமிப்பிள்ளை கடவுள் பத்தியிலும் அடியார் பத்தியிலும் சிறந்து விளங்கினர். பசித்து வந்தோர்க்கு உணவு கொடுப்பதும் வறியவர்க்கு

ஒல்லும் வகை உதவி செய்வதும் இலக்குமிப் பிள்ளை யின் வாழ்க்கைக் குறிக்கோள். கதிர்காமர் இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் வல்லவர்; பாரதம், கந்தபுராணம் என்னும் இரண்டு நூல்களிலும் மிகுந்த பயிற்சி யுடையவர். அவர் தெற்கு நவாலியி லிருந்த மயில்வாகன வுபாத்தியாயரிடம் கல்வி கற்ற வர்; சில காலம் அரச சேவை செய்தபின்னர் மன்னாரில் வியாபாரஞ் செய்து வந்தார்.

## பெற்றோர் தவம்

மக்கட்பேறில்லாத குறை பெற்றோரைப் பெரி தும் வருத்தியது. இருவரும் விரதமிருந்தும் நேர்த்தி கள் செய்தும் வந்தனர். தாயார் நவாலி யட்டகிரி முருகப் பெருமானை நாடோறும் வழிபட்டு ஆண்டு தோறும் கந்தசட்டி விரதம் அனுட்டித்து மகேசுர பூசை செய்து வந்தனர். தந்தையார் முள்ளு மிதியடி யிலே பாற்காவடி யெடுத்தும், கந்த புராணம் படித்து அன்னதானஞ் செய்தும் வந்தனர். இப்படி ஆண்டு கள் மூன்று கழிந்தன.

## தாயார் கனா

ஒரு நாளிரவு புலவரின் தாயார் ஒரு கனாக் கண் டார். ஓர் அழகிய ஆண் மயில் கலாபம் விரித்தாடிய படி தோன்றித் "தாயே! நான் உன்னிடம் வரப் போகின்றேன்" என்று கூறிச் சிறிது நேரத்தில் மறைந்தது. தாயார் விழித் தெழுந்து இக் கனாவைத் தம் கணவர்க் குரைத்தார். முருகப் பெருமான்

அருளால் ஒரு நற்புதல்வர் நமக்குத் தோற்றுவார் என்று கணவர் கனுப்பொரு ளுரைத்து, விடிந்த வுடன் முருகப் பெருமான் கோயில் புகுந்து பூசையும் வழிபாடுஞ் செய்து வந்தனர். தாயாருக்கு அம் மயில் இடையிடையே கனவிற் றோன்றுவ துண்டு.

## புலவர் பிறத்தல்

இலக்குமிப்பிள்ளை கருப்ப முற்றுப் பத்துத் திங்கள் இனிது கழிந்தன. விக்கிரம ஆண்டு வைகாசித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் சனிக்கிழமை பொழுது உதயமாகிய பின்னர் பரணி நட்சத்திரமும் மிதுன ஓரையும் கூடிய தீதறு செவ்வியிற் புலவர் பிறந்தார். தவத்தின் பயன் கைகூடியதை நினைந்து நினைந்து தாயுந் தந்தையும் மகிழ்ந்தனர்; கோயில் நேர்த்திகளைச் செவ்வையாக முடித்தனர்; அட்டகிரி முருகப் பெருமானுக்குச் சிறப்பு வகையிற் பூசை முதலியன செய்வித்தனர்; இவையன்றி ஆண்டுதோறும் புலவர் பிறந்த பரணிக்கு அடுத்த கார்த்திகை நாளில் அட்டகிரி முருகப் பெருமானுக்குத் திருவிழாச் செய்தும் வந்தனர். அத் திருவிழா இன்றும் தொடர்பாகச் செய்யப்பட்டு வருகின்றது.

## ஆறுமுகப் பெரியார் சோதிடம்

அந் நாளிலே புலவரின் தந்தையார், பருத்தித் துறை வழக்குமன்றத்திலே ஓர் அலுவலாளராக அமர்ந்திருந்தார். அவர் தமது புதல்வரின் சாதகக்தை எழுதுவிக்க விரும்பி, அவ் வூரிலே மதிப்பும்

செல்வாக்கும் மிகுந்து விளங்கிய ஆறுமுகப் பெரியார் என்பவரை யடைந்தார். ஆறுமுகப் பெரியார் சோதிட நூலிலும் மந்திரக் கலையிலும் வல்லவராய் விளங்கினர்; கொடிய நச்சுப் பாம்புகள் தீண்டியோரையெல்லாஞ் சில நாழிகைப் பொழுதில் மயக்கந் தெளிவித்து உணர்வு பிறக்கச் செய்யும் ஆற்றலுடையவர்.

ஆறுமுகப் பெரியார், புலவரின் சாதகத்தைத் திறம்படக் கணித்துக் குழந்தையின் நிறம் தன்மை முதலியன வுசாவிப் பரிசோதனை செய்து பலன் தெளிந்து மகிழ்ச்சி பொங்க வெழுந்து நின்று, "அருமையரே! இக் குழந்தைக்குப் பூரண ஆயுள்; பெரிய கல்விமானுய் விளங்குவான்" என்று தமது தொடையிலே தட்டிக் குளறினர்; சில நாளிலே சாதகத்தைத் திட்ப நுட்பமாகக் கணித்து எழுதிக்கொடுத்தார். அப் பெரியார் குறித்தபடியே பலன் இன்றும் நிகழ்ந்து வருகின்றது.

## அத்தியாயம் 2

## கல்விப் பயிற்சி

### ஏடு தொடக்குதல்

புலவருக்கு ஐந்தாண்டு வந்ததும் தாய்தந்தையர் ஏடு தொடக்குதலாகிய வித்தியாரம்பச் சடங்கினைச் செய்விக்கக் கருதி, மாணிப்பாயிலுள்ள அருணசல வுபாத்தியாயரைக்கொண்டு அதனைச் சிறப்புறச் செய்வித்தனர். புலவர் அர ஓம் நம நன்றாக என்று

சொல்லும்போது, அட்டகிரி முருகப் பெருமான் கோயில் மணி கேட்டது. அதனை வாழ்த்தொலியாக அருணசல வுபாத்தியாயர் கூறினர்.

## அருணசல வுபாத்தியாயர் பாடம்

அருணசல வுபாத்தியாயர் அப்பொழுது மானிப் பாயில் ஒரு தமிழ்ப் பாடசாலை வைத்து நடத்தி வந் தார். அப் பாடசாலையிலே புலவர் கற்றலை விரும்பிய பெற்ருேர் அவரை அங்கே அனுப்பினர். கணபதிப் பிள்ளை என்னு மொருவர் புலவருக்கு நெருங்கிய உறவினர்; திடகாத்திரமான உடம்புடையவர்; வீம சேனன் என்று சொல்லத்தக்க தோற்றப் பொலி வுடையவர். அவர் காலையில் வந்து புலவரைத் தமது தோள்களிலே சுமந்து கொண்டுபோய்ப் பாடசாலை யில் விட்டுப் படிப்பு முடிந்ததும் மீட்டும் அப்படியே சுமந்து வருவார்; புலவருக்கு ஏழு எட்டு வயதாகும் வரையும் அப்படியே செய்து வந்தனர். அந் நாளிலே நவாலியிலே ஒரு கிறித்த பாடசாலை இருந்தது. அதிற் படிப்போருக்கு ஆங்கிலப் படிப்பும் உத்தியோகமும் கிடைப்பது எளிது. அப்படியிருந்தும் தந்தையார் சைவப்பற்றுடையவ் ராதலின் அக் கிறித்த பாட சாலையிலே புலவரை விட்டுப் படிப்பிக்க விரும்பிற்றி லர். அருணசல வுபாத்தியாயர் பிள்ளைகளிலே கிரம் பிய அன்புடையவர்; ஆறுதலாகப் பாடங்களைக் கற் பிப்பார். அவர் புலவருக்கு ஆத்திசூடி, வெற்றி வேற்கை, கொன்றைவேந்தன், விரும்பித் தொழு வார் முதலிய நூல்களைக் கற்பித்தார். எண்கணிதம் வாசிப்பு முதலிய பாடங்களையும் சொல்லிக் கொடுத்

தார்; இடைவேளையிலே தேவாரப் பண்களையும் பயிற்றிவந்தார். புலவருடைய குரல் மிகவினிமையா னது. ஏனைய பிள்ளைகளிலும் பார்க்கப் புலவர் விவே கமும் சாதுரியமு முடையவரா யிருந்தமை உபாத்தி யாயருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. அந் நாளில் அச்சுப் புத்தகங்கள் கிடைப்பது அரிது. உபாத்தியா யர் பனையோலையிலே எழுத்தாணி கொண்டு பாடங் களையும் பாடல்களையும் எழுதிக் கொடுப்பார். புலவ ருக்கு ஞாபகசத்தி அதிகம். ஒருமுறை படித்த அள விலே மனப்பாடம் ஆகிவிடும். இவ்வகைச் சிறப்பாற் றல்கள் இருப்பதைக்கண்ட அருணசல வுபாத்தியாயர் புலவருக்குக் குமரேசர் சதகம், தண்டலையார் சதகம் என்பவற்றிலே பல பாடல்களை மனப்பாடஞ் செய் வித்தார்.

## தம்பையா உபாத்தியாயர் பாடம்

அருணசல வுபாத்தியாயரிடம் ஐந்தாண்டுகள் கற்ற பின்பு, புலவர் நவாலியிலுள்ள கந்த நயினர் மகன் தம்பையா உபாத்தியாயர் வைத்து நடத்திய கல்விச் சாலையிற் புகுந்து கல்வி கற்ருர். அங்கே கணிதம், பூமிசாத்திரம், இதிகாசம், ஆங்கிலம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தமிழிலே எட்டாம் வகுப்பும் ஆங்கிலத்தில் நாலாம் வகுப்பும் பயின்று சித்தியெய்திய பின்பு, புலவர் ஆங்கிலங் கற்க விரும் பினர்.

## இராமலிங்க வுபாத்தியாயர் பாடம்

மானிப்பாயில் மாரிமுத்து உபாத்தியாயர் வைத்து நடத்திய ஆங்கில பாடசாலையில், புலவர் நான்கு

ஆண்டுகள் ஆங்கிலங் கற்றார். புலவரின் பெரிய தந்தை முறையானவர் மாதவர் வேலாயுதர். அவருக்கு மகன் இராமலிங்க வுபாத்தியாயர். அவர் அப் பாடசாலையிலே ஆசிரியராக அப்பொழுது இருந்தார். அவர் மிக்க விருப்பத்தோடு ஆங்கிலங் கற்பித்து வந்தார். நான்கு ஆண்டுகள் கழிந்ததும் புலவர் ஆங்கிலம் எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தார். பின்பு ஆங்கிலத்தில் விசேட அறிவு பெறுதற் பொருட்டு அவர் மேலும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து கற்று நிரம்பிய அறிவு தேடிக்கொண்டார். புலவருக்கு அப்போது வயது பதினேழு.

## கல்வித் துணைவன்

கல்வியை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிதற்கு ஒரு துணைவன் இன்றியமையாது வேண்டப்படுவன். புலவருக்கு **வைத்திய லிங்கம்** என்பவர் கல்வித்துணைவராயினர். அவர் இராமலிங்க வுபாத்தியாயருடைய மகன். புலவரும் வைத்தியலிங்கமும் ஒத்த நண்பும் பண்பும் உடையவர். இவர்கள் நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை என்னும் கிராமங்களிலுள்ள வாலிபர்களை யெல்லாம் சேர்த்துச் சைவ வாலிபர் சங்கம் ஒன்றை நிறுவிப் புராணப்படிப்பு, சமயபாட வகுப்பு, சமய விவாதம் என்பவற்றை நடத்திவந்தனர். இருவரும் சமயப் பொருள்களைப் பற்றி விவாதஞ் செய்வதைக் கேட்பது இன்பந் தரும். அதிலே புலவருடைய பேச்சுத்திறமையையும் தார்க்கிகமான பரபக்க கண்டனத்தையும் எல்லாரும் மெச்சுவர். சில வேளைகளிலே சில விவாதங்கள் பலநாளெடுக்

கும். சில விவாதங்களுக்கு இராமலிங்க வுபாத்தியாயர் தீர்ப்புச் செய்ய முடியாமற் போவது முண்டு விவாதச் சொற்போர்களில் மட்டும் அவர்கள் இருவரும் அருச்சுனனும் கன்னனும் போல இருப்பார்கள்; விவாதம் முடிந்ததும் உதயணனும் யூகியும் போல அன்பிற் கெழுமி நடப்பார்கள்.

## சைவ நூற் கல்வி

புலவர் சமயநூல்களிற் பயிற்சி பெறுதற்கு விரும்பினார்; முதலிலே திருவாதவூரடிகள் புராணத்தை இராமலிங்க வுபாத்தியாயரிடம் படித்துச் சைவ சமயத்திற் குரிய அடிப்படையான கொள்கைகளை யறிந்து கொண்டார்; அதன்மேற் சைவப் பிரகாசம் படித்தார்; சிவஞான சித்தியார் என்னும் நூலைக் கோப்பாயில் இருந்த வேலுப்பிள்ளை உபாத்தியாயரிடமும், பருத்தித் துறையிலுள்ள தாமோதரம்பிள்ளை அவர்களிடமுங் கற்றுக் கொண்டார். அவற்றின் உதவியைக்கொண்டு சிவஞானபோதம், ஞானமிர்தம் என்னும் நூல்களைப் பின்னர் தாமே கற்றுத் தெளிந்து கொண்டனர். புலவருடைய தந்தையார் இளமையிலேயே அவருக்குத் தாயுமானவர் பாடல்களிற் பலவற்றையும் திருவாசகத்தையும் கற்பித்திருந்தார்.

## இலக்கியக் கல்வி

அவர் கந்த புராணத்தைத் தந்தையாரிடம் முறையாகக் கற்றார்; திருக்குறள், திருவிளையாடற் புராணம், பாரதம் என்பவற்றைத் தாமே மெல்ல

மெல்லக் கற்றனர். அவர் தமக்குத் தெரியா விடங் களைத் தந்தையாரிடமும் இராமலிங்க வுபாத்தியாய ரிடமுங் கேட்டுத் தெளிந்து கொள்வர்.

## அத்தியாயம் 3

## செய்யு ளியற்றல்

### செய்யுள் செய்தல்

தமிழிலே பாட்டுப் பாடவேண்டும் என்னும் எண் ணம் அவருக்குப் பதினைந்தாவது வயதிலே உண்டா யிற்று. புலவருடைய தந்தையார் கந்த புராணம், பாரதம் என்னும் நூல்களில் வரும் சந்த விருத்தங் களைத் தெரிந்து நல்ல இசையோடு குரலெடுத்துப் பாடிக்காட்டுவார். அப் பாடல்களி லமைந்த இனிய சந்தங்கள் அசாக்கிரமாகப் புலவரின் மனத்திலே யூன்றிப் பதிந்தன. அப் பதிவு நாளடைவிலே வளர்ந்து, புதிய வெண்ணங்களிலே உருப்பட்டு, உணர்ச்சி வடிவினவாய் வெளிப்பட்டன. ஒரு முறை புலவர் சில பாடல்களைப் பாடி அவற்றை வட்டுக் கோட்டை மாதாவின் கோயி லருச்சகராயிருந்த வித்துவான் நா. சுப்பிரமணியஐயருக்குக் காட்டினர். அவர் அப் பாடல்களைப் பாராட்டிப் புலவரை யூக்கப் படுத்தினர். அப் பாடல்கள் இப்பொழுது இல்லை. ஒருமுறை வைத்தியலிங்கம், 'ஆறுமுகமெனத் தொ டங்கிக் கதியென முடியும்' ஒரு வெண்பாப் பாடும்படி கேட்டார். உடனே புலவர்,

ஆறு முக முடையாய் ஆறிரண்டு தோளுடையாய்
ஏறு மயிலுடையா யென்னுடையாய் — கூறுசெயும்
வேலுடையாய் என்றன் வினையுடைய வேமிதிக்குங்
காலுடையாய் நீயே கதி

என்று பாடினார். இன்னும் ஒருமுறை அவர் வைத்திய லிங்கத்திற்குச் சில விளாம் பழங்களை யனுப்பினார். புலவர் வீட்டிலே விளா மரங்கள் அதிகம். நல்ல சுவையான பழங்களைத் தரும் விளா மரங்களுமுண்டு. விளாம் பழங்களோடு அவர் ஒரு வெண்பாவையும் எழுதி யனுப்பினார். அவ் வெண்பா இது:—

என்று மினும்பழத்தி லிச்சைவைத்துத் தின்னவேன்று
தின்றால் விளாம்பழத்தைத் தின்னேன்றார் — இன்றுனக்கு
நல்ல விளாம்பழங்கள் நாலைந் தனுப்புகின்றேன்
வெல்லத் துடனுண்க வே.

புலவர் ஒருமுறை வைத்தியலிங்கம் வீட்டிற்குச் சென்றிருந்தார். வைத்தியலிங்கத்தின் தாயார் புலவரிலே மிகுந்த பற்றுடையவர்.. தாயார், இருவருக்கும் வடையும் முறுக்கும், அவித்த கொண்டைக் கடலையும் வாழைப்பழங்களும் உண்பதற்குக் கொடுத்தார். இராமலிங்க வுபாத்தியாயர் அந் நேரம் வீட்டிலில்லை. அதனால் இருவரும் மிகச் சுயாதீனமாய் நடந்து கொள்ள வசதியுண்டு. வைத்திய லிங்கம், "இந்தச் சிற்றுண்டிப் பண்டங்களை யமைத்து நீர் படித்த சித்தாந்தப் பொருள் விளங்க ஒரு பாடல் பாடும். பார்ப்போம்" என்று கூறினார். புலவர் சிறிது நேரம் சிந்தித்துப் பின்வரும் வெண்பாவைப் பாடிக் கொடுத்தார்.

விந்து சுடுவேடை விண்வெளி யுட்டுளே
கந்த முறுக்குப் பிரணவம் — வந்த
கடலே கலையாக் கதலி சுவையா
வுடையது சிற்றுண்டி யோர்.

வைத்தியலிங்கம் பாட்டின் பொருளை வியந்தார்; அந்தப் பாடலை இராமலிங்க வுபாத்தியாருக்குக் காட்டினார். அவர் புலவரை யதிகம் ஊக்கப்படுத்தினார். ஆயினும், "காரிகை படித்த பின்பு கவிபாடலாம்; இப்போது இலக்கியங்களைப் படி" என்று அவர் கூறியது புலவருக்கு மனமடிவை யுண்டாக்கியது. பாட வேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் பெருகியது. புலவருக்கு ஒருநாள் துணிவு பிறந்தது. "இராமலிங்க உபாத்தியாயர் குறிக்கும் பொருள்பற்றிப் பாடல் செய்து காட்டுதல் வேண்டும்' என்று அவர் எண்ணினார். "உபாத்தியாயர் பாடல்களை ஏற்றுப் பாராட்டினால் தாமும் பாடல் செய்வது தகுதியானது என்று கொள்ளலாம்" என்ற கருத்தே புலவருக் கிருந்தது.

ஒருநாள் புலவர் உபாத்தியாயர் வீடு சென்று அவரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர், "நீ பாட ஆசைப்படுகின்றாய்; நல்லது, முருகப் பெருமான் உனது குலதெய்வம். அவர்மேலே ஒரு பாடல் செய். நான் குளித்துப் பூசை முடித்தற்கு முன்பு பாடுவாயா?" என்றார். புலவருக்கு அது சிறை விடுதலைபோ லிருந்தது., அவர், "ஆம், அப்படியே செய்வேன்" என்றார். உபாத்தியாயர் குளித்துப் பூசை முடித்தற்குப் போய்விட்டார். புலவர் பாடத் தொடங்கினார். அவர் ஒரு விருத்தம் பாடி முடித்தார். அது வருமாறு :

அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடு
யாறு முகப்பதுமம்
அத்தி முகத்தர் மனத்தி லினித்திடு
மாறிரு கண்மவழம்
கொஞ்சு மொழிக்குற வஞ்சி முலைக்கொழு
கொண்டுழு திடுகோடு
குஞ்சரி சஞ்சரி கந்தொடர் மஞ்சரி
கொண்டணை யண்டர்தரு
செஞ்சர ணஞ்சர ணென்றுல கந்துதி
தேவி மணிக்குழவி
தேவர்கள் முடிமணி யசுரர்க ளடிபணி
தீர குமாரசிவம்
நெஞ்சினி லென்று நிறைந்தொளி தந்திடு
நீல மயிற்கதிரோன்
நேரலர் தலையடு வேலா யுதமெமை
நின்று புரந்திடுமே

*பாடி முடிந்ததும் அவர் அதனைத் தமது நண்பர் வைத்திய லிங்கத்திற்குக் காட்டினர். அவர் பலமுறை வாசித்து மகிழ்ந்து, தந்தையார் பூசை முடித்து வந்த வுடன் காட்டுதற்கு வைத்திருந்தார்.*

*உபாத்தியாயர் சிறிது நேரத்தில் வந்தார்; 'பாட்டு முடிந்ததா?' என்று கேட்டார். புலவர் தாம் பாடிய பாடலைக் காட்டினர். அவர் இருமுறை படித்துப் பாட்டின் ஓசை நயத்தையும் பொருட்சிறப் பையுங் கண்டு புலவரைப் பாராட்டி, "இனி நீ பாட லாம்; உனக்குப் பாட்டு வரும்; நவாலி அட்டகிரி முருகப் பெருமான்மேல் ஒரு பதிகம் பாடு" என்று*

புலவரை யூக்கப்படுத்தி வாழ்த்தி விட்டார். புலவர் பெரிதும் மகிழ்ந்து தமது இல்லந் திரும்பினுர்.

அதன் பின்பு அவர் பல பாடல்களைப் பாடிக் காட்டுவர்.

### யாப்பிலக்கணங் கற்றல்

புலவர் யாப்பிலக்கணங் கற்க விரும்பினுர். அக் காலத்தில் புத்தகங்கள் கிடைப்பது அரிது. சிலநாள் முயன்று தேடியதின் பயனுக அவருக்கு ஒரு யாப்பிலக்கணச் சுருக்கம் கிடைத்தது. அதனைப் படித்த பின்பு, யாப்பருங்கலக்காரிகை யொன்று கிடைத்தது. அதனையும் அவர் கற்றுக்கொண்டார். தமது ஆசிரியர் கட்டளைப்படி அவர் அட்டகிரி முருகவேள் பதிகம் ஒன்று பாடி அவருக்குக் காட்டினுர். ஆசிரியர் அப் பாடலின் ஓசை நயத்தையும் ஆற்ருெழுக்கன்ன நடையையும் பாராட்டினுர்.

## அத்தியாயம் 4

## ஆசிரிய ராதல்

### ஆசிரியர் சின்னத்துரையின் தொடர்பு

ஆசிரியர் சின்னத்துரை வட்டுக்கோட்டையி லுள்ளவர். ஆங்கிலத்தில் (F A.) பரீட்சையிற் சித்தியடைந்த இவர் மாரிமுத்து உபாத்தியாயருடைய பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். புலவர் ஆங் கிலத்திலே எட்டாம் வகுப்பிற் சித்தி யெய்திய பின்

னார் ஆங்கிலாசிரியப் புகுமுகத் தேர்வுக்கு ஆயத்தஞ் செய்ய விரும்பினார். ஆசிரியர் சின்னத்துரையின் தொடர்பு புலவருக்கு நல்ல வாய்ப்பைத் தந்தது. அவரிடம் ஓராண்டு ஆங்கிலங் கற்றார். ஆங்கிலத்திலே நல்ல இலக்கியங்களை யெல்லாம் புலவர் விரும்பிக் கற்றார்.

ஆசிரியப் புகுமுகத் தேர்வுக்குக் கணிதம், ஆங்கிலம், பூமி சாத்திரம், சரித்திரம் படிப்பித்தற் பயிற்சியைச் சாதனையிற் காட்டுதல் என்பனவே அந்நாட் பாடங்கள். புலவர் இப் பாடங்களைச் சின்னத்துரை யாசிரியரிடம் கற்றுவந்தார்.

மாரிமுத்து உபாத்தியாயருடைய பாடசாலை குலையவே சின்னத்துரையவர்கள் சித்தங்கேணியைச் சார்ந்த கலட்டியென்னும் இடத்திலே புதிதாக ஓர் ஆங்கிலக் கழகம் அமைத்துக் கல்வி பயிற்ற விரும்பினார். புலவருடைய நல்ல பண்புகளும் சைவாசாரமும் தமிழறிவும் சின்னத்துரை ஆசிரியரைக் கவர்ந்தன. "நான் வட்டுக்கோட்டையில் ஒரு புதிய பாடசாலையை ஆரம்பிக்கப் போகின்றேன்; நீ அங்கே வா; என்னுடன் இருந்து படிப்பித்துக் கொண்டு சோதனை யெடுக்கலாம்" என்று அவர் புலவரைக் கேட்டார். புலவரும் சம்மதித்தார்.

## ஆசிரியராதல்

கி. பி. 1899-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 24-ம் நாளிலே வட்டுக்கோட்டையிற் கலட்டி யென்று வழங்கும் இடத்தில் சின்னத்துரை அவர்களும் புலவ

ரும் ஒரு பாடசாலையைத் தொடங்கினர். அப் பாடசாலையே இப்பொழுது வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையாக விளங்குகின்றது. கழகந் தொடங்கிய பொழுது பிள்ளைகளின் தொகை பதினைந்து. மாதந்தோறும் புதிய பிள்ளைகள் வந்து சேர்ந்தனர். புலவர் தமிழ், ஆங்கிலம், இதிகாசம் என்னும் பாடங்களைக் கற்பித்து வந்தனர். ஆசிரியப் புகுமுகத் தேர்வுக்கு இரண்டு முறை புலவர் பிரவேசித்தார். சில பாடங்களிற் றவறியதால் அவர் சித்தி யெய்திற்றிலர். ஆண்டுதோறும் வித்தியா தரிசகர் புலவரின் படிப்பித்தற் றிறமையைப் பாராட்டுவர்.

## சைவப் பெற்ரோர் மதிப்பு

புலவரிடமுள்ள நல்லொழுக்கமும், சைவாசாரமும், கற்பிக்குந் திறமையும் வட்டுக்கோட்டையிலுள்ள சைவப் பெற்ரோரைக் கவர்ந்தன. புலவர் கலாசாலையிலே படித்த பிள்ளைகளுக்கு ஆண்டுதோறும் சமய தீட்சை வைப்பித்தும், சைவாசாரங்களை எடுத்துரைத்தும் வந்தனர்; பிள்ளைகளுக்குத் தேவாரமோதவும், புராணம் படிக்கவும், பயன் சொல்லவும் பழக்கி வந்தனர். புலவர் செய்து வந்த சைவத் தொண்டுகள் வட்டுநகர் சைவப் பெற்ரோருக்குப் பெரியதோ ருள்ளக் கிளர்ச்சியையும் ஆறுதலையுங் கொடுத்தன. புலவரிலே மாணவரும் அன்பும் நன்மதிப்பும் வைத்திருந்தனர். இவற்ருல் வட்டுக்கோட்டை புலவருடைய சொந்தக் கிராமம்போலாயிற்று.

## அத்தியாயம்

# குருவருட்பேறு

### குருவைக் காணுதல்

புலவருக்குப் பத்து வயதிலே சமயதீட்சை செய்விக்கப்பட்டது. அன்று முதலாகப் புலவர் நியமந் தவறாது காலையும் மாலையும் வணக்கமும் வழிபாடுஞ் செய்து வந்தனர். தவமும் தவமுடையார்க்கே கிடைக்கும். அவர் இளமை முதலாகத் தங் குலதெய்வமாகிய முருகக் கடவுள் மேலே அளவிறந்த பத்தியுடையவராய்க் கந்தசட்டி, திருக்கார்த்திகை முதலிய விரதங்களை அநுட்டித்து வந்தனர். திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம் என்னும் இரண்டு நூல்களையும் பாராயணஞ் செய்து வந்தனர். புலவருடைய தந்தையாருக்குக் கந்தரலங்காரத்தில் நல்ல தேர்ச்சி யுண்டு. அவர் நாடோறும் ஒவ்வொரு செய்யுளாக மனப்பாடஞ் செய்வித்தனர். புலவருக்கு இருபது வயதான காலத்திலே உண்மையை அறியவேண்டு மென்னும் ஒரு நல்லெண்ணம் மனத்திலே உருப்பட்டு நாடோறும் வளர்ந்து வந்தது. சமயத்தின் நோக்கம் கடவுளை அறிதலென்றும், அக் கடவுளை யறிதற்கு வேண்டும் உபதேசங்களை யருளவல்ல சற்குரு ஒருவர் வாய்த்தல் வேண்டு மென்றும் புலவர் நினைந்துவந்தார். அந் நல்லெண்ணம் புலவர் மனத்தை நிறைத்து விட்டது. சுருங்கக் கூறுமிடத்து, மழை வேண்டி நிற்கும் வாடிய பயிர்போலப் புலவர் ஒரு சற்குருவை வேண்டி நின்றார். அப்போது புலவருக்கு இருபத்தொரு வயது நடக்கின்றது.

## குருநாதன் வருகை

தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரிலிருந்து ஒரு சித்தசாமியார் நவாலிக்கு வந்தார். அவர் பெயர் சுப்பிரமணிய சுவாமியார். அவர் ஒரு சித்தர். மெய் யுணர்ச்சி தலைப்பட்டஞானி. ஒரு நான்கு முழ வேட்டி யும் ஒரு போர்வையுந் தரித்துக்கொள்வார். அவை காவி தோயாத தூய வெண்மை நிறமுடையன. அவர் தம்மை இவனென்றே சொல்லிக் கொள்வார். யோக சாதனையால் அவர் இளமைத் தோற்றத்தோடு விளங்கினர். மந்திரம், யோகம், மருத்துவம் முதலிய கலைகளிலே அவர் வல்லவர். நவாலி தெற்கிலிருந்த ஓரன்பர் இல்லத்திலே சாமியார் வந்திருப்பதை யறிந்து புலவர் அங்கே சென்றார்.

சாமியார் புலவரைக் கண்டதும் கருணையோடு புன்முறுவல் பூத்துச் "சோமசுந்தரம், வா, வா" என்று கூறியருளினர். புலவர் சாமியாரை உள்ளன் போடு வணங்கித் திருநீறு வாங்கித் தரித்து நின்றார். குருவைக் காண வேண்டும் என்ற எண்ணம் நிறை வேறியதும், சாமியாரே தமக்கு உண்மை யுணர்த்தத் தகுந்தவர் என்று புலவர் உறுதியாக நம்பியிருந் தார். சாமியார் புலவரின் உள்ளக் கருத்தினை யறிந்து, "உனக்குமாகத்தான் இவன் வந்தது" என்று சொல்லிப் புலவரை வழிநாட் காலை வருமாறு கட்டளையிட்டார். புலவர் எல்லையற்ற உவகையால் உள்ளம் நிறையக் குருநாதனை வணங்கி விடைபெற் றுத் தமது இல்லஞ் சென்றார்.

## குருநாதன் அருள் செய்தல்

அடுத்த நாள் ஒரு சனிக்கிழமை. வழக்கம் போலப் புலவர் சந்தியா வந்தனம் முடித்துக் கொண்டு தம் தந்தையாருக்குச் சாமியாரின் வரலாற்றைச் சொல்லித் தாம் அவரைக் காணப் போதலையும் தெரிவித்துக் குருநாதனைக் காணச் சென்றார். தாயார் சனிக்கிழமை விரதத்திற்கானவை செய்து வைத்து விட்டுப் புலவரின் வருகையை நோக்கியிருந்தார். சாமியார் இராமலிங்க வுபாத்தியாயரோடு நெடும் பொழுது பேசிக் கொண்டிருந்த பின்பு, "இவன் இன்றைக்கு அவன் வீட்டிற் சாப்பிடுவான்" என்று சொல்லிப் புலவரோடு வீட்டிற்கு எழுந்தருளினார். குருநாதன் தம் வீட்டிற்கு எழுந்தருளிய கருணையை நினைந்து நினைந்து புலவரும் தாயாரும் தந்தையாரும் ஆனந்தங் கொண்டனர். சாமியார் குளித்துத் தமது வழிபாடுகளை முடித்து உணவருந்தினார். எல்லாரும் உணவருந்திச் சாமியாரின் அருளிப்பாட்டை நோக்கியிருந்தனர். சாமியார் சிலநாட் புலவரில்லத்திலே தங்கியிருந்தனர். புலவருடைய துணைவரான ஆறுமுகம்பிள்ளை, வேலுப்பிள்ளை, சரவணமுத்து என்போர் சாமியாருக்குத் தொண்டுகள் செய்துவந்தனர். ஒருநாள், சாமியார் புலவரை நோக்கிச் "சோமசுந்தரம்! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். புலவர் "வேண்டுவதறிவதும் வேண்டாததறிவதும் சாமிக்கே தெரியும்" என்று மெல்லக் கூறினார். புலவர் வேண்டியது, முருகப் பெருமானை மெய்யன்போடு நாடோறும் வழிபட்டு நிலையுள்ள பெருவாழ்வைப் பெறுவதையே. அதனை உணர்ந்த குரு

நாதன் புன்னகை பூத்து, "இவன் தருவது உனக்கு எல்லாந் தரும்" என்று கூறி ஓர் அருட்குறியைக் கொடுத்தருளினர். அதனை இன்றும் புலவர் வழிபட்டு வருகின்றனர். சாமியார் சிலநாள் நவாலியிலிருந்து சித்தாடல்கள் பல செய்து, பல அன்பர்க்கு அருள் பாலித்து பெங்களூருக்குப் போயினர். நவாலியில் இராமலிங்க வுபாத்தியாயர், வைத்தியலிங்கம், புராண வுரையாசிரியர், தம்பையா வுபாத்தியாயர் முதலியோர் சாமியாரின் அருள் பெற்றோர்.

## தம்பையா வுபாத்தியாயர் தொடர்பு

சாமியாருடைய அருள் பெற்றவருள் உபாத்தியாயரும் ஒருவர். அக் காலந் தொட்டு உபாத்தியாயர் புலவருடைய நண்பராயினர். அக் காலத்திற் கோயில்களிலே புராணப்படிப்பு மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது.

உபாத்தியாயருக்குப் பண்களும் இராகங்களும் நன்றாய்த் தெரியும். புராணப் பாடல்களை அவர் அழகுற வாசிப்பார்; நல்ல வுரையுஞ் சொல்லுவார். புலவரும், வைத்தியலிங்கமும், உபாத்தியாயரும் புராணப் படிப்புக்குக் கூடிச் செல்வர். அவர்கள் சில காலம் நவாலியிலே தேவார வகுப்பும் புராண வகுப்பும் வைத்து நடத்தினர். அப்பொழுது புலவருக்கு இருபத்தைந்து வயது.

## பல்கலைப் படிப்பு.

சுப்பிரமணிய சுவாமியார் அருள்பெற்ற நாண் முதற் புலவர் கல்வியிலும் சைவ சித்தாந்த நூல்

விளக்கத்திலும் சிறப்புற்றுத் தாமே பல நுண் பொருள்களை மிக வெளிதாய் விளங்கக் கூடியவராயினர். புலவர் வைத்தியம் படிக்க விரும்பிச் சில நூல்களைத் தருவித்துப் படித்து விளங்கிக்கொண்டார். அதன்பின்பு அவர் சோதிடம் படிக்க விரும்பி அறிஞர் சிலர் உதவியோடு அதனைக் கற்றுத் தேறினர். மந்திர வேடுகள் பல தந்தையாரிடம் இருந்தன; அவற்றிலும் அவர் பழக்கமுடையவ ரானர். சங்க விலக்கியங்களைப் படித்தற்குப் புலவர் விரும்பிய போது முதலில் இறையனூரகப் பொரு ளுரையும் கலித்தொகையும் கிடைக்கப் பெற்று அவற்றைப் பேரார்வத்தோடு கற்றூர்; கைக் குறிநூல் படித் தற்கு விரும்பி ஆங்கிலத்திலுள்ள சில நூல்களைக் கற்றுக்கொண்டார்.

## அத்தியாயம் 6

# மணவினையும் பெரியோர் நட்பும்

### புலவர் திருமணம்

புலவரை இல்லறத்திலே புகுத்துதற்குப் பெற் ரோர் பெரிதும் விரும்பினர். ஆனல், புலவர் உலகத் தில் ஈடுபடுதல் தமது நோக்கங்களுக்குத் தடையாகு மென்று கருதி மறுத்துக்கொண்டு வந்தனர். அப் பொழுது புலவருக்கு இருபத்தெட்டு வயது. பெற் ரோரின் நெருக்கம் அதிகரித்தது. மைந்தன் திரு மணத்தை வெறுத்து நிற்பதைக் கண்டு, தாயார் பெங் களூர்க் குருநாதனை நினைந்து முறையிட்டு வந்தார்.

ஒருநாள் பெங்களூரிலிருந்து சாமியாரின் கடிதம் ஒன்று வந்தது. அதிலே, "நீ உனது பெற்ரோர் விருப்பப்படி திருமணத்தை நிறைவேற்று. எனக்கும் அதுவே விருப்பம்" என்று காணப்பட்டது. உடனே புலவர் மணம் முடித்துக்கோடற் கிசைந்தார்.

. புலவரின் தாய்மாமனர், **வேலுப்பிள்ளை** யென்பவர் சங்குவேலியிலே சிறப்போடு வாழ்ந்து வந்தார். அவர் புலவரைத் தமக்கு மருகராக்க விரும்பித் தமது மைத்துனரையும் சகோதரி இலக்குமிப்பிள்ளையையும் கேட்டனர். அவர்கள் இருவரும் அதற்கிசைந்தனர். வேலுப்பிள்ளை தமது அருமைப் புதல்வியார் **சின்னம்மை**யைப் புலவருக்கு மணம்முடித்துக் கொடுத்தார். நற்குணங்களிலும் நற்செய்கைகளிலும் சிறந்து விளங்கிய சின்னம்மையார், புலவர் இயல்புகளுக்குப் பெரிதும் இணக்க முடையவராய் இருந்தனர். இல்லறம் மிகச் செம்மையாக நடந்தது. நடந்துவரும் நாளில் புலவருக்குப் புதல்வர் மூவரும் புதல்வியர் இருவரும் பிறந்தனர்.

## பெரியோர் நட்பு

இங்ஙனம் இல்லறம் நடத்திவருங் காலத்திலே புலவர் பல நூல்கள் செய்தனர். அவற்றுள்ளே சில அக் காலத்தில் புலவர் துணைவராகிய வேலுப்பிள்ளை அவர்களின் உதவியால் வெளிவந்தன. முதன் முதலாகப் புலவர் பாடிய **அட்டகிரிப் பதிகங்**களிரண்டும் **சாவித்திரி** கதையும் சிறப்பானவை. அந் நூல்களைக் கண்ட மாதகல் ஏரம்பையர், மட்டுவில் வேலுப்

பிள்ளை உபாத்தியாயர் முதலியோர் புலவரை நன்கு பாராட்டினர். உடுவிலிலுள்ள சங்கர சுப்பையர் என்னும் அந்தணர் ஒருவர் புலவரோடு நல்ல நட்பாக விருந்தனர். அக்காலத்திற் புலவர் செய்த தனிப் பாடல்கள் மிகப்பல. அவற்றைப் பத்திரிகைகளிலும் வெளியீடுகளிலுங் கண்ட பலர் புலவருக்குக் கடிதம் எழுதித் தொடர்பு வைத்துக்கொண்டனர். தென்னிந்தியப் புலவருள்ளே அக் காலத்திற் புலவருடன் தொடர்புபட் டிருந்தோர் அருணாசலக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர், மறைமலையடிக ளென்னும் சுவாமி வேதாசலம் முதலியோராவர். இப்பொழுது புலவருக்கு முப்பது ஆண்டு.

## புலவருக்கு வறுமையின் உறவு

வட்டுக் கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையிற் புலவர் கற்பித்துக்கொண்டுவந்தமை முன்னர் உரைத்தோம். அவருக்குக் கிடைத்த வேதனம் மிகக் குறைவு. குடும்பச் செலவு கூடிக்கொண்டு வந்தது. அதனாற் புலவர் கடன்பட நேர்ந்தது; செல்வர்கள் பலரை இரந்து செல்ல நேர்ந்தது. நாளுக்கு நாள் வறுமைப்பிணி வருத்தியது. அப்படியிருந்தும் புலவரின் மனைவியார் சின்னம்மையார் வறுமையிற் செம்மையாகக் குடும்பத்தை இனிது நடத்திவந்தார். பழங்காலத்திலிருந்த புலவர்களின் வறுமையைத் தமிழ் மன்னரும் பெருஞ் செல்வரும் போக்கி வந்தனர். இந்நாளில் அத்தகைய வித்துவ சன்மானங்கள் கிடையாமையாற் புலவர் மிகுதியும் வருத்தப் பட்டார். வறுமையாற் புலவர் வருந்திய திறத்தை

நாமகள் புகழ் மாலையிலும், சுப்பிரமணியக் கடவுள் மிடிமாலையிலும், இலக்குமி தோத்திரத்திலும் தெளிவாகக் காணலாம்.

## புலவருக்குப் பிணிகளின் உறவு

புலவருக்கு முப்பத்திரண்டு வயது ஆனதும் இராகுதிசை தொடங்கியது. உடம்பிற் பல பிணிகள் உண்டாயின. ஏழாண்டு வரையில் மூலநோய் புலவரை மிகுதியும் வருத்தியது. மூலநோய் மாறத் தொய்வு நோய் பிடித்துக் கொண்டது. தொய்வினலே புலவர் பட்ட வருத்தப்பாடு இம்மட்டன்று. தொய்வு நோயாளருக்கு 'நித்திய கண்டம் பூரணயுள்' என்று வைத்தியர் சொல்வர். இராக்காலங்களில் தொய்வினல் வருந்தி நித்திரையின்றி மெலிந்து போனலும் புலவர் தமது நித்தியாநுட்டானங்களிலும் கடமைகளிலும் தவறுவதில்லை. பொழுது உதயமாகிச் சில நாழிகையிற் றொய்வு விட்டுவிடும். அதன் பின்பு அவர் தமது கடமைகளைச் செவ்வனே செய்வர்.

## துணைவர் வேலுப்பிள்ளை

திருவாளர் வேலுப்பிள்ளை புலவரின் தம்பியென்று முன்னறிந்தோம். அவர் புலவரிடம் படித்த மாணவருமாவர். வேலுப்பிள்ளை அவர்கள் சுப்பிரமணிய சுவாமிகளின் அருள் பெற்றவர்; நல்ல இயல்புகளும் பண்புகளு முடையவர். தமிழ்ப் பாட்டுக்களைச் சுவைக்குந் தன்மையுடையவர்; தமது தமையனராகிய புலவரின் பாடல்களிற் பெருமதிப்புடையவர். புலவர் தந் தம்பிக்குக் கடிதங்கள் எழுதுந்தோறும்,

வாழ்த்தும் வணக்கமுமாக முருகக் கடவுளையும் நாமகளையும் தமிழாற் பாடிக் கடித மெழுதுவார். அப்படி யெழுதும் பாடல்களைப் படித்துச் சுவைத்துக் கொள்வார்கள். அந்தப் பாடல்களை யெல்லாம் அவர்கள் சிதையாதபடி பேணி எழுதி வைத்திருக்கிறார்கள். புலவர் அவர்களை யூக்கப்படுத்திக் காலந்தோறும் பல நூல்களை ஆக்குவித்து வந்தார்கள். உயிரிளங் குமரன் நாடகம், தாலவிலாசம், அட்டகிரிக் கலம்பகம், நாமகள் தாலாட்டு, சாவித்திரி கதை, கந்த புராணக் கதைகளின் உண்மை நூற்பொருள் என்பன வேலுப்பிள்ளை யவர்களின் ஊக்கத்தாற் பிறந்தவை. கம்பருக்குச் சடையப்ப வள்ளல் வாய்த்தமை போலப் புலவருக்கு அவர் துணைவர் வாய்த்தார்.

## நண்பன் சுப்பிரமணிய பிள்ளை

வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையைத் தொடங்கி ஆசிரியராக விருந்துவந்த அண்மைக் காலத்தில் மூளாயிலுள்ள **பண்டிதர் சுப்பிரமணியம்** என்பவர் அங்கே ஆசிரியராகச் சேர்ந்தனர். அவரை யெல்லோரும் 'தமிழ்ச் சட்டம்பியார்' என்று வழங்குவர். அவர் நன்னூலிலே நிரம்பிய பயிற்சியுடையவர். புலவரும் பண்டிதரும் தேனும் பாலும் போன்று அன்பிற் கெழுமி நட்பிற் பழமை கனிந்து விளங்கினர். பண்டிதரிடம் தருமருடைய பொறை குடிகொண்டிருந்தது. 'மலையே வரினும் தலையே சும' என்று அவர் எந்த ஆபத்து வேளையிலும் சொல்லிக் கொள்வார். இருவருக்கும் சைவன் ஒருவன் மத்தியான உணவு கொடுப்பது வழக்கம்.

சில வேளைகளிலே கறிகள் உப்புப் புளியிற் குறைந்தும் மிகக் கூடியும் இருக்கும். அவற்றிற்கெல்லாம் இருவரும் அற்புதமான கற்பனைப் பாடல்களைப் பாடு வர். இருவரும் ஒருவரைவிட் டொருவர் இருக்க மாட் டார்கள். பண்டிதர் அவர்கள் வட்டுக்கோட்டையில் புலவரோடு உடனிருந்து முப்பத்தைந்து வருடம் கல்வி பயிற்றினர். பண்டிதருக்குக் கவலை தெரியாது; எந்நேரமும் புலவரோடு நகைச் சுவை பொருந்த உரையாடுவர்.

## அத்தியாயம் 7

## தெய்வ வழிபாடும் நூல்களும்

### குலதெய்வ வழிபாடு

புலவர் முருகப் பெருமானையும் நாமகளையுந் தங் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றார்; நாடோறுங் காலையிலும் மாலையிலும் குலதெய்வங் களுக்குப் பூசையும் வழிபாடுஞ் செய்து வருவார். முருகப் பெருமானை நினைந்து வழிபடுதற்கேற்ற கந்த சட்டி நாள்களையும், நாமகளை நினைந்து வழிபடுதற் கேற்ற நவராத்திரி நாள்களையும் புலவர் சிறப்பான நாள்களாகக் கொண்டு விசேட பூசையும் வழிபாடுஞ் செய்வர். நவராத்திரி நாள்களிற் கடைசி மூன்று நாள்களையும் தமிழ் நாளென்றும் கலைச் செல்வம் மிகுந் திருநாளென்றும் அவர் கூறுவர். முருகப் பெரு மான் மேற் பாடப்பட்ட நூல் வகையிற் பல, கந்த சட்டி விரத நாள்களை யடுத்துப் பாடப்பட்டனவாம்.

நாமகள் மேற் பாடப்பட்டவைகளிற் பெரும்பாலன நவராத்திரி காலங்களிற் செய்யப்பட்டனவாம். புலவர் தங் குலதெய்வங்களுக்குப் பூசை செய்தொழிய உணவு கொள்ளார்; தங் குலதெய்வங்களை உயிர்ப் பிணி மருத்துவராகக் கருதி வழிபாடு செய்துவந்தாலும், உடம்பிற் பிணியுற்ற போதும் வாழ்க்கையில் வறுமை புகுந்து வருத்தியபோதும், அவற்றை நீக்குதற்கு அத் தெய்வங்களையே பெரிதும் வேண்டுவர்.

தமிழ்ப்பாட்டின் சுவையறியுந் தெய்வங்களாதலின் அவர் பாடல்களை நயந்தேற்று வேண்டுவன நல்கும். புலவருக்கு நாற்பத்தெட்டு வயதாகவிருக்கும் போது கொடிய சன்னி நோய் பற்றிக் கொண்டது. அந் நாளிலே புலவருக்குச் சாதக பலனும் அத்துணை வாய்ப்பாக வில்லை. நோயும் நாடோறும் மிகுந்து வந்தது. அந்தப் பொல்லா வேளையிலும் புலவருக்கு முருகப் பெருமானுடைய நினைப்பு நீங்கவில்லை. அவர் கந்தவனக் கடவையி லெழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமான் மேல் நேர்த்தி செய்து திருநீறு முதலிய பிரசாதமும் தீர்த்தமும் எடுத்து வருமாறு ஒருவரை அனுப்பினர். பூசை செய்வித்தற்கு வேண்டிய ஒழுங்குடனே அவர் சென்று புலவரின் நோயைப் பற்றிக் கோயிலதிகாரியாகிய சைவத் திருவாளர் திக்கஞ் செல்லையா பிள்ளை யவர்களுக்குக் கூறினர். புலவரும் திக்கம் செல்லையா பிள்ளையும் நெருங்கிய நண்பினர். திக்கம் விசேட அருச்சனை முதலிய வழிபாடுகள் செய்வித்துத் திருநீறு, சந்தனம், தீர்த்தம் முதலிய பிரசாதங்களைப் புலவருக்கு அனுப்பிவைத்தனர். புலவர் அவற்றை மெய்யன்போடு அணிந்து

தீர்த்தத்தை இடையிடையே பருகியும் வந்தனர். அன்றே காய்ச்சல் தணியலுற்றது. படிமுறையாகப் பிணி நீங்கி, அவர் நலமெய்தினர். நலமெய்திச் சில தினங்கள் கழிய அவர் முருகப் பெருமான் மீது கந்த வனக் கடவை நான்மணி மாலையும், பதிகமும், திருப் பள்ளி யெழுச்சியும் பாடித் தமது நேர்த்தியைப் பூர்த்தி செய்தார்.

## நரசிங்க வைரவர்

புலவர் வீட்டிலே மூன்று முறை களவுபோய்விட் டது. பொருளில்லாமையினலே அத் தீயவர் களவு செய்திலர். தமது அதிகாரத்தை மறைமுகமாகக் காட்டி யடாத்துச் செய்வதே அத் தீயவர் தொழில். களவெடுத்ததோ டமையாது அதனைப் பலருக்குச் சொல்லித் தூற்றியுந் திரிந்தனர். அதனைப் புலவர் பொறுக்கமாட்டாராய் நவாலியின் தெற்கெல்லையி லெழுந்தருளியிருக்கும் காவற் றெய்வமாகிய கல் லுண்டை வைரவக் கடவுள்மே லொரு பதிகம் பாடி, அதனை அவர் முன்னிலையிற் றமே பலமுறை படித் துப் பூசையும் பொங்கலுஞ் செய்து வந்தனர். சில நாளில் அத் தீயவர் புலவரை யடுத்துத் தாம் அறி யாமையினலே செய்துகொண்ட பெரும் பிழையைப் பொறுக்க வேண்டுமென்று பொறுதி கேட்டுச் செல் வாராயினர்.

## கதிரைமலை வேலவர்

கி. பி. 1920ஆம் ஆண்டுவரையிலே புலவருடைய இளைய தம்பியார் சரவணமுத்து அவர்களுக்குக் கண் ணிலே நோயுண்டாகி வருத்தியது. ஆங்கிலந் தமிழ்

என்னும் இரண்டு முறையான வைத்தியஞ் செய்வித்தும் நலமுற்றிலது. கதிர்காமத்திலே தானும் புலவருமாக நின்று வழிபட்டதாகவும் அதன்பின்பு நோய் நீங்கியதாகவும் சரவணமுத்து அவர்கள் ஒரு கனக் கண்டார்கள்.

சரவணமுத்து அவர்களும் முருகப் பெருமானிடத்திலே உறைப்பான பத்திவைராக்கிய முடையவர்; சைவாசாரமும் பூசை நியமங்களு முடையவர். அவர் அக் கனத் திறத்தைப் புலவருக்கு எழுதி யறிவித்தார். புலவர் அதனை நோய் நீங்குதற்குரிய தெய்வக் குறிப்புப் போலும் என்று கருதி விரதமிருந்து **கதிர்காம வேலவர் பதிகம்** ஒன்றைப் பாடிச் சரவணமுத்து அவர்களுக்கு அனுப்பிவிட்டார். அவர் மிகுந்த ஆசார சீலராய் அதனை நாடோறும் படித்து முருகப் பெருமானை வழிபட்டு வந்தார். சில நாளில் அவருக்கிருந்த கண்ணோய் மாறிவிட்டது. மாறி முடிந்ததும் புலவருடைய ஒரு கண் நோயுற்றது. அது ஏழு எட்டு ஆண்டுவரையும் வருத்திற்று. புலவர் (கி. பி. 1929-ஆம் ஆண்டில்) எம்பெருமான் மேலொரு சிலேடை வெண்பாப் பிரபந்தம் பாடி நோய் நீங்கினர்.

### மருதடி விநாயகர்

புலவரின் மூத்த புதல்வி **மங்கையர்க்கரசி.** அவர் இளமை முதலாக மானிப்பாயி லெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை மெய்யன்போடு வழிபட்டு வருகின்றார். கி.பி. 1930-ஆம் ஆண்டு வரையில் மங்

கையர்க்கரசிக்கு விநாயகப் பெருமான் கனவிற் றேன்றி அருட் குறிப்புக்கள் சிலவற்றைக் காட்டியருளினர். இவ்வகையான அருளிப்பாடுகள் அடிக்கடி நிகழ்வதைப் புதல்வியார் சொல்லக் கேட்ட புலவர் விநாயகப் பெருமானைச் சிறப்பு வகையிலே வழிபடுதற்கேற்ற ஒரு பாமாலையைப் பாடிப் புதல்வியிடங் கொடுத்தார். புதல்வியார் அந்நாண்முதலாக அப் பாடல்களை நியமந் தவருது படித்து வருகின்றுர்; சில காலஞ் செல்ல அந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த விரும்பினர். விரும்பிய புதல்வியார் மருதடி விநாயகப் பெருமானுடைய வைபவங்களையும் அருளாடல்களையும் தொகுத்துத் தாமே யுரைநடையிலெழுதித் தமது தந்தையார் பாடலோடு அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

## அட்டகிரி முருகப்பெருமான்

தமது ஆசிரியர் இராமலிங்க உபாத்தியாயர் கட்டளைப்படி புலவர் முருகப் பெருமான்மீது ஓர் பதிகம் பாடியதை முன்னே குறித்தோம். அது பாடிச் சில்லாண்டு கழிய வேறும் ஒரு பதிகம் அவர் பாடினர். இரண்டும் பதிப்பித்து வெளி வந்துள்ளன. கி.பி. 1927-ஆம் ஆண்டளவில் அட்டகிரி முருகப்பெருமான் மேல் ஒரு கலம்பகப் பிரபந்தமும் அட்டகிரி வெண்பாவும் பாடினர்.

## நல்லை முருகப்பெருமான்

நல்லூரில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான்மேல் வேறு வேறு காலங்களில் இரண்டு பதிகங்கள் பாடினர். பின்னர் ஓரந்தாதியும் திருப்புக

மும் பாடினார். அந்தாதியும் திருப்புகழும் புலவருடைய துணைவர் வேலுப்பிள்ளை அவர்கள் வேண்டியபடி பாடப்பட்டவை. அந்தாதி தோத்திர வடிவாயமைதல் வேண்டப்பட்ட தாகலின் மடக்கு, திரிபு முதலியன விரவாது பாடினார். அந்தாதியும் திருப்புகழும் நல்லை முருகப் பெருமானது மெய்யடியார்க்குப் பெரிதும் வாய்ப்பானவை. இவையன்றி மாவை முருகப் பெருமான்மீது ஒரு பதிகமும் பாடினார்.

## அத்தியாயம் 8

# புலவர்ப் பட்டமும் உயர்நிலைக் கல்வியும்

### நாடகம் எழுதுதல்

புலவர் வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையில் நாற்பதாண்டுகள் ஆசிரியராக இருந்தார். அக்காலத்திலே கலாசாலைப் பிள்ளைகள் நடித்தற்கு ஓரங்க நாடகம், சல்லாபம் முதலியன எழுதிக்கொடுத்துப் பாடஞ் செய்வித்து நடிப்பிப்பார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திருத்தத்தை மக்களிட முண்டாக்கும்.

கி. பி. 1925ஆம் ஆண்டிலே கலாசாலைப் பிள்ளைகளுக்குச் சைவசித்தாந்தத்தைத் தழுவிச் சில காட்சிகளில் ஒரு சிறு நாடகம் எழுதிக் கொடுத்து நடிப்பித்தார். நாடகத்தைப் பார்த்த பலர் அதனைப் பாராட்டினார்கள். புலவரின் துணைவர் வேலுப்

பிள்ளை யவர்கள் அந்நாடகத்தை விரித்தெழுதித் தருமாறு பெரிதும் வேண்டினர். கி.பி. 1926 ஆம் ஆண்டில் அச் சிறு நாடகத்தை விரித்து 'உயிரிளங் குமரன்' என்று பெயர் தந்து எழுதி முடித்து மாண வரும் ஆசிரியரும் ஆக அதனைப் பயின்று நடித்த னர். புலவர் திருநீலகண்டருக்கு நடித்தார். அந் நாடகத்தின் அருமை பெருமைகளை யறிந்த கொழும் புத் தமிழறிஞர் அதனைக் கொழும்பிலே ஒருமுறை நடிக்குமாறு வேண்டினர். வேண்டியோருள் முதன் மையானவர் அப்போது கொங்கோங்கு நிதிச்சாலைச் சிறுப்பராயிருந்த நவாலியூர்ச் சரவணமுத்து குமார சாமி யவர்கள் ஆவர். அவர் புலவருடைய பழைய மாணவர். அவர் புலவரையும் நாடக நடிகரையும் அங்கே அழைப்பித்துச் சிந்தும்பிட்டி அரங்கிலே நடிப்பித்தனர். அப்போது தென்னிந்தியாவினின் றும் கொழும்புக்கு வந்திருந்த சட்ட நூலறிஞரும் செந்தமிழாராய்ச்சி யாளரும் ஆகிய சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L. அவர்களும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. சுப்பிரமணிய பிள்ளை நாடகத்தின் சிறப் புக்களைப் பாராட்டினர். அவரன்றிக் குலசேகரன் பட்டினத்திலுள்ள தனித்தமிழ்ப் புலவர் இராமநாத பிள்ளையும், முதலியார் இராசநாயகமும் வேறு பல ரும் அதன் சிறப்புக்களைப் பாராட்டினர்.

## புலவர்ப் பட்டம்

உயிரிளங்குமரன் நாடகத்தின் சிறப்புக்களை யறிந்த பெரியோர் பலர் நூலாசிரியர்க்குப் புலவர்ப் பட்டமும் பரிசிலும் வழங்கிச் சிறப்புச் செய்ய

வெண்ணினர். அப் பெரியோருள் ஒருவர் முதலியார் இராசநாயகம் அவர்களாவர். மற்றவர் அப்போது மானிப்பாய்க் கிராமச் சங்கத் தலைவரா யிருந்த திருவாளர் சோமசுந்தர மாவர். அவர்கள், நவாலியி லிருந்த திருவாளர் வை. மயில்வாகனம் அவர்களும் அப்பொழுது உடையாராயிருந்த திரு. வீரசிங்கம் அவர்களையும் துணைக்கொண்டு நவாலி அட்டகிரிக் கந்தசாமியார் கோயிலின் வடக்கு வீதிக்கு அண்மையி லிருக்கும் பெரியவளவில் நாடகவரங்கும் பந்தலும் அமைத்து உயிரிளங்குமரன் நாடகத்தை நடப்பித் தனர். நாடகம் முடிந்ததும், வட்டுநகர் மகா வித்து வான் ஆறுமுகம்பிள்ளை நாடகத்தின் சிறப்புக்களை யும் நாடகாசிரியரின் கவித்துவ விசித்திரத்தையும் எடுத் துரைத்தார். முதலியார் இராச நாயகமும், கிராமச் சங்கத்தலைவர் சோமசுந்தரமும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வீரசிங்கம் அவர்களும் புல வருடைய கலைத் தொண்டு சமயத் தொண்டுகளைப் பற்றிப் பாராட்டினர். முடிவிலே, அவர்கள் பெருந் திரளான சைவ மக்களின் மனத்திலே உவகை பொங்க, நாடகாசிரியருக்குப் புலவர்ப் பட்டமும் தங்கப் பதக்கமும் நல்கி இல்லஞ் சேர்ப்பித்தனர். இது நிகழ்ந்தது கி. பி. 1927-ஆம் ஆண்டிலாகும்.

## கற்பித்தற்றிறமை

புலவர் ஒரே கலாசாலையில் நாற்பதாண்டு வரை யிலே ஆசிரியராக இருந்தமை ஆசிரிய உலகம் பின் பற்றக்கூடிய ஒரு நற்பண்பாகும். பயிற்சி பெறாத ஆசிரியராக இருந்தாலும் அவர் பயிற்சி பெற்றோரி

லும் பார்க்கச் சிறப்பாகக் கற்பிப்பார். புலவருடைய கையெழுத்து மிக நேர்த்தியானது. அதனுற் கீழ் வகுப்புக்களிலும் மேல் வகுப்புக்களிலும் உறுப்பெழுத்துப் பாடமும் சொல்வதெழுதற் பாடமும் அவரே நடத்தி வந்தார். வித்தியாதரிசகர் அப் பாடங்களிற் குறை சொல்வதே கிடையாது. அவர் கணிதபாடத்தை மிகத் திறமையோடு கற்பிப்பார். இலக்கிய பாடமும் இதிகாசமும் புலவருடைய சுவையான பாடங்கள். இரண்டனையும் கற்பித்தற்கு அவர் சிறந்த முறைகளும் அமைத்துக் கொள்ளுவார். இலக்கியப் பாட்டுக்களைப் புலவர் தமது இனிய குரலால் எடுத்துப் பாடுவார். முதல் வாசிப்பிலேயே பாட்டின் பொதுப் பொருள் விளங்கக்கூடும். பாட்டுக்களை அவர் இரண்டு மூன்றுமுறை திறம்பட வாசிப்பர்; பின்பு பாட்டினுள்ளே புகுந்து நயமுரைப்பர். திருக்குறள், கந்தபுராணம், திருமுருகாற்றுப்படை முதலியவற்றுக்கு அவர் நயமுரைப்பது மிக அழகுடையதா யிருக்கும். அவர் திருக்குறளிற் சிற்சில இடங்களுக்குத் திட்ப நுட்பமான பதசாரங் கூறுவர். இவைகளினலே தமிழ்ப் பாடம் பிள்ளைகளுக்குச் சுமையாவதில்லை. புலவருடைய மாணவருட் பெரும்பாலார் இலக்கிய இரசிகராக வருவது வழக்கம். வித்தியா தரிசகர் புலவருடைய தமிழ் வகுப்புக்களைப் பரீட்சிப்பதுமிகக்குறைவு.

## தமிழில் உயர்தரக் கல்வி

தமிழிலே உயர்தரக் கல்விக்குரிய வகுப்புகளைச் சனி, ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் தமது வீட்டிலும் வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலை

யிலும் வைத்து நடத்துவது வழக்கம். அங்ஙனம் கற்பித்தற்கு வேதனம் வாங்கும் வழக்கம் புலவரிடமில்லை. அதனைத் தமிழ்த் தொண்டெனக் கருதியே அவர் செய்து வருகின்றனர்.

இலண்டன் பல்கலைக் கழகத்தார் நடத்திவரும் கலைமாணிப் பரீட்சைக்குரிய தமிழ்ப் பாடநூல்களை அவர் மாணவர்க்கு அறிவுறுத்தி வந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியிலே தமிழ்ப்புலமை நடத்திவரும் திருவாளர். க. மதியாபரணம் M. A. அவர்களும், இலங்கைப் பாராளுமன்ற மேற்சபை யுறுப்பினராய்த் திகழும் சட்ட நூலறிஞர் S. R. கனகநாயகம் அவர்களும், அருள் யோவான் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர், க. சுப்பிரமணியம் B. A. அவர்களும், புலவருடைய நூல்களைப் பதிப்பித்து வரும் செ. இளையதம்பி B. A. அவர்களும், காலஞ்சென்ற தெல்லிப்பளை வழக்கறிஞர் கனகராயர் அவர்களும் புலவரிடந் தமிழ் கற்றோருள் முதன்மையானவர்கள் ஆவர். வித்தியாதரிசகர்களாக இருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் மு. சிவரத்தினம் அவர்களும், விசயரத்தினம் அவர்களும் புலவரிடம் தமிழ் பயின்றோர் ஆவர். வித்துவான், பண்டிதர், புலவர் முதலிய தேர்வுகளுக்கு மாணவர் பலர் புலவரிடம் வந்து படிப்பது வழக்கம். சிறப்பாகச் செய்யுளியற்றலும் யாப்பருங்கலம், அகப் பொருள், மாறனலங்காரம் முதலிய இலக்கண பாடங்களும் கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்கோவையார், சிவஞானபோதம் என்பனவும் புலவர் உவந்து கற்பிப்பனவாம்,

## செய்யுள் செய்யப் பயிற்றுதல்

செய்யுள் செய்யப் பயிற்றுதல் புலவருக்குப் பொழுது போக்காகும். அகவலும் அறுசீர் விருத்தமும் பாடுதற்கு எளிதானவை என்று அவற்றையே முதலிற் பயிற்றுவார். அகவலிலும் பலவகைப் பிடிகளை எடுத்துக் காட்டுவார். சிலப்பதிகார நடையிலே புலவருக்கு விருப்ப மதிகம். கல்லாட நடையையும் பெருங்கதை நடையையும் மாணவர்க்கு வாசித்துக் காட்டி மகிழ்வர். மாணிக்க வாசகருடைய அகவல் நடையையும் விருத்த நடையையும் பலபடப் பாராட்டி, "அது தெய்வ நலஞ் சான்ற நடை; அதனை யாம் பாடமாட்டோம்; அந்த நடை யமைதி தெய்வப் புலவர்க்கே யமைந்தது" என்று கூறுவர். வழக்கறிஞரும் பண்டிதருமாக விளங்கிய க. சிதம்பரநாதன், காலஞ் சென்ற வட்டுநகர் வழக்கறிஞர் நாகலிங்கம், பண்டிதர் முத்துவேற்பிள்ளை, முருகேசபிள்ளை, பண்டிதர் சரவணமுத்து, பண்டிதர் இளமுருகனர், உள்ளிட்ட பலர் புலவரிடம் செய்யுள் செய்யக் கற்றுக் கொண்டனர். "செய்யுள் இயல்பாகப் பிறத்தல் வேண்டும்; வலிந்து எதுகை மோனைகளை யமைத்துக் கட்டடமாக்க வரமாட்டாது; காதும் மனமுங் கூர்மைப் பட்டு அமைதல் வேண்டும்" என்று புலவர் அடிக்கடி கூறுவர். விருத்த நடையழகிற்குக் கம்பனையும் சேக்கிழார் பெருமானையும் பலமுறை வாசிக்கச் சொல்லுவார். திருமுருகாற்றுப்படையையும் சகல கலாவல்லி மாலையையும் பாராயணஞ் செய்து வந்தாற் றமிழ்ப்புலமை யுண்டாகு மென்று புலவர் தம் மாணவர் எல்லார்க்கும் எப்பொழுதும் கூறுவர்.

## சித்தாந்த வகுப்பு

• அவர் சைவ சித்தாந்த நுண்பொருள்களைத் தம் மாணவர்க்குச் சொல்ல விரும்பி விடுமுறைக் காலத்திலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் வகுப்புக்கள் வைத்து நடத்துவது வழக்கம்; சைவாங்கில வித்தியா சாலையிலே புலவருடன் கற்பித்த ஆசிரியர்களுள், திருவாளர்கள் தில்லையம்பலம், சுப்பிரமணியம், இராசகாரியர், மயில்வாகனம், முதலியோர்க்குச் சிவப்பிரகாசமுஞ் சித்தியாருங் கற்பித்தனர். வழக்கறிஞர் நாகலிங்கம், பண்டிதர் சிதம்பரநாதன் முதலியோர் சிவஞானபோதம் பாடங் கேட்டனர்.

புலவர் இரண்டு மூன்று வருடங்களாகத் தமது இல்லத்திலே ஒரு வகுப்பு வைத்து நடத்தினர். அவ் வகுப்பிலே க. மதியாபரணம் M. A., பண்டிதர் இளமுருகனார், முருகேச உபாத்தியாயர் முதலியோர் சித்தியார் பாடங் கேட்டனர்.

## புராண வகுப்பு

யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் புராணப் படிப்பிலே மிகுந்த ஆர்வமுடையவர்கள்; கோயில் தோறும் கந்த புராணமும் திருவாதவூரடிகள் புராணமும் பெரிய புராணமும் படிப்பார்கள். நவாலியிலுள்ள சைவப்பிள்ளைகள் பலர்க்குத் திருவாதவூரடிகள் புராணம் படிக்கவும் பயன் சொல்லவும் புலவர் அவர்கள் மிக அழகாகப் பழக்கி வந்தார்கள். அயற் கிராமங்களிலுள்ள பார்ப்பனப் பிள்ளைகளும்

சைவப் பிள்ளைகளும் கந்தபுராணத்திற்குப் பயனறிந்து செல்வர். முறைப்படி பயின்றோர், புலவருடைய துணைவர்கள் வேலுப்பிள்ளை அவர்களும் சரவணமுத்து அவர்களும் ச. குமாரசுவாமியவர்களுமாவர். புராணங்களில் விசேடப் படிப்பு நிகழும் போது புலவர் தமது மாணவரை உரைகூற விட்டுப் பயிற்சி பெறுவிப்பது வழக்கம்.

## சிறுவர் இலக்கியம்

திருவாளர் க. ச. அருணந்தி அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலே பெரும்பாக வித்தியாதரிசியாக இருந்த காலத்திலே, ஆங்கிலத்தில் இருப்பதுபோலத் தமிழிலும் சிறுவர் இலக்கியம் இருத்தல் வேண்டும் என்று விரும்பி யாழ்ப்பாணத்திலும் கொளும்பு, மட்டக்களப்பு முதலிய இடங்களிலுமுள்ள புலவர்களையும் பண்டிதர்களையும் அத்தகைய இலக்கியப் பாடல்கள் பாடித் தரும்படி தூண்டினர். புலவரவர்கள் ஆடிப் பிறப்பு, கத்தரிவெருளி, தாடியறுந்த வேடன் முதலிய சிறுவர் பாடல்களைப் பாடிக் கொடுத்தனர். அவற்றின் சிறப்புக்கண்டு இலங்கை வித்தியா பகுதியினர் அவருக்குப் பரிசில் வழங்கினார்கள்.

புலவருடைய பேரப்பிள்ளைகளிலே வரதராசப் பெருமாள், குமாரபாரதி, சோமசுந்தரபாரதி யென்னும் பிள்ளைகள் படித்து மகிழ்தற்கு அவ்வக்காலங்களிலே பாடிக்கொடுத்த சிறுவர் இலக்கியங்கள் பல. 'பவளக் கொடி' 'கொழுக் கட்டைப் பொன்னன்'

அன்புடைய தாய்' 'விறகுவெட்டி' 'இலவு காத்த கிளி' 'மனம் நிறைந்த செல்வன்' முதலியன இப் போதும் படிக்கப்பட்டு வருகின்றன. புலவர் செய்த சிறுவர் பாடல்களின் சிறப்புக்களை அவ்வக்காலங் களிலே பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களும் அந்தணர் செம்மல் சதாசிவ ஐயர் அவர்களும் பாராட்டி வந்தார்கள்.

வட்டுக் கோட்டைச் சைவாங்கில வித்தியா சாலை யிலே தலைமையாசிரியராக விருந்த திருவாளர் சபா ரத்தின சிங்கம் B. A. அவர்கள் சிறுவர்க்குரிய சுகா தாரக் கும்மி யென்னும் ஒரு நல்வழி நூல் எழுது வித்து, அப்போது இலங்கைத் தேசாதிபதியாக இருந்த மாட்சிமை மிகுந்த சேர் - அன்று கல்டிக் கொற்றவர்களுக்கு உரிமை யாக்கி வெளிப்படுத்து வித்தார்கள். அது இப்போது எல்லாப் பள்ளிச் சிறுவராலும் படிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை அமெரிக்க கிறித்த சபையாருக்குப் பண்டிதர் இளமுருகனார் கி. பி. 1938-ஆம் ஆண்டில் எழுதிக் கொடுத்த தமிழ் வாசகத்துக்கும் சில சிறுவர் பாடல்கள் எழுதி நல்கினர். இவ்வகைச் செய்யுள் இலக்கியமன்றிக் கி. பி. 1912-ஆம் ஆண்டு வரையிலே 'சாவித்திரி கதை' யென்னும் உரைநடை யிலக்கியத் தையுஞ் செய்தார்.

**பத்திரிகை நடத்தல்**

கி. பி. 1910-ஆம் ஆண்டு வரையிலே புலவரும் அவர் நண்பர் பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களும்

ஒரு திங்கள் வெளியீடு நடத்தக் கருதினர். அக்காலத்திலே, போலி மாயாவாதமும் கிறித்த மதமும் பரவிச் சைவ வாலிபரை யாட்கொள்ளப் பார்த்தன. சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தைக் குறைத்துப் பேசுவதும் எழுதுவதும் புலவருக்குப் பெருந்துன்பஞ் செய்வனவாம். பத்திரிகை நடாத்துவதைப் பற்றி யோசனை பெறுதற்குப் புலவரும் அவர் நண்பருஞ் சுன்னுகம் ஸ்ரீமத். அ. குமாரசாமிப் புலவரிடஞ் சென்றனர். அவர் அவ்வெண்ணத்தை மிகப் பாராட்டிப் பத்திரிகைக்குச் "சைவ பாலிய சம்போதனி" என்று பெயருங் குறித்து விட்டனர். பண்டிதர் சுப்பிரமணியம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, பத்திரிகை ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் நடைபெற்றன. தென்னிந்தியப் புலவர்களும் சைவ சித்தாந்தப் பொருள்பற்றிக் கட்டுரைகள் கவிதைகள் முதலியன எழுதி வந்தனர், புலவர், மாயாவாதக் கொள்கைகளை மறுத்துப் பல்வேறு கட்டுரைகள் தொடர்பாக எழுதி வந்தனர். பெரும்பாலும் சைவாசார விளக்கங்களும் அதில் வெளிவந்தன. அப்பத்திரிகை அக்காலச் சைவ மக்களுக்குச் சைவ சமய விளக்கத்தை யூட்டி வருவதாயிற்று.

## யோகர் சுவாமிகளைத் தரிசித்தல்

கி. பி. 1928-ம் ஆண்டிலே புலவர் யோகர் சுவாமிகளைக் கண்டனர். அவர் புலவருக்கு நல்ல கருமங்கள் பலவற்றை எடுத்துரைத்து, "சோமசுந்தரம்! உனக்குத்தான் ஒரு பெரியவர் எல்லாந் தந்திருக்கிருர். உனக்கொரு குறையுமில்லை; நீ

நினைத்தவை சித்தியாகும்" என்று கூறிவிட்டார். சிவயோக நாதக் குருமணிமேலே புலவர் ஒரு தோத்திரப் பாமாலை பாடினர். இடையிடையே புலவர் சுவாமிகளைத் தரிசித்து அருள் பெறுவதுண்டு. புலவருடைய தம்பியார் வேலுப்பிள்ளை யவர்கள் யோகர் சுவாமியிலே மிகுந்த மெய்யன்புடையவர். அவர் கண்டி நகரிலே உத்தியோகமாயிருக்கின்றார். அவரிடம் சாமியார் அடிக்கடி போவதுண்டு; போகும்போதெல்லாம் "கொண்ணன் என்ன பாடி அனுப்பினன்" என்று கேட்பார். வேலுப்பிள்ளை அவர்கள் தமக்குப் புலவர் அனுப்பும் பாடல்களைச் சாமிக்குப் படித்துக் காட்டுவார். நாமகள் புகழ் மாலையிற் பல பாடல்களும், பதி பசு பாச விளக்க மென்னும் கிளிக் கும்மியும், நல்லை முருகன் திருப் புகழும் சாமியாருடைய கட்டளைப்படியே பாடப்பட்டவை

## அத்தியாயம் 9

## பொற்கிழி பெறுதல்

### பொற்கிழி வழங்குதல்

புலவர், வட்டுக் கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலையைத் தொடங்கி நாற்பது ஆண்டு வரையும் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். நாற்பது ஆண்டுகளுக்கு ஒருவர் ஒரே கலாசாலையிற் கடமை செய்தல் வியப்புக்கும் மகிழ்வுக்கும் உரியதாம். புலவர் ஏறத்தாழ ஆயிரத்தைஞ்ஞூறு மாணவரைப் படிப்பித்துள்ளார்கள். அவர்களிற் பெரும்பாலர் அரசினரின் பல்

வேறு துறைகளிலே உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்து விளங்குகின்றனர். இப்போது இலங்கைப் பாராளுமன்றத்துக் கல்விப் பகுதிக் காரியதரிசியாக விளங்கும் க. கனகரத்தினம் அவர்களும் புலவருடைய நன்மாணக்கருள் ஒருவர். பலர் மலாய் நாட்டிலே உத்தியோகம் பார்த்து இளைப்பாறியுள்ளார்கள். புலவருடைய மாணக்கரிற் பெரும் பாலர் சைவாசாரமும் தமிழ்ப் பண்பாடும் மிகுந்து விளங்குகின்றனர்.

புலவர், ஆசிரியத் தொழிலினின்றும் இளைப் பாறியது கி. பி. 1938-ஆம் ஆண்டிலென்ப. நாற்பது ஆண்டுகளாகப் புலவர் செய்த அளப்பருஞ் சேவை களை வட்டுக் கோட்டையிலுள்ள சைவ நன் மக்களும் பழைய புதிய மாணக்கரும் ஆசிரியரும் பெரிதும் மதித்து மூவாயிரம் ரூபா கொண்ட பொற்கிழி ஒன்று வழங்கி பெரியதொரு கொண்டாட்டம் நிகழ்த்தினார் கள். அலங்காரஞ் செய்த மோட்டார் வண்டியிற் புலவரையும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரையும் ஏற்றி ஊர்வலஞ் செய்து இல்லஞ் சேர்ப்பித்தனர். பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார், வித்துவான் கணேசையர், வித்துவான் சுப்பையாபிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் தில்லைநாதர், சுவாமிஞானப்பிரகாசர், வரகவி அமிர்தநாத பிள்ளை முதலியோர் புலவரின் மெய்ப் புலமையைப் பாராட்டி வாழ்த்துக் கவிகள் அனுப்பினர்.

பொற்கிழி வழங்குதற்குப் பெருந்துணையா யிருந் தோர் புலவரின் நன் மாணக்கராகிய வட்டுக் கோட்டைச் சாமி சரவணமுத்து அவர்களும், அந் நாளிலே

கலாசாலை அதிபராயிருந்த திருவாளர் மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களும் பிறருமாவர். வட்டுக்கோட்டையிலுள்ளார் புலவருக்குச் செய்த நன்றிக் கடன் எல்லோரும் பின்பற்றுதற் கேற்றதாம்.

## வரவேற்புப் பாக்கள்

கலைச்செல்வர்களா யுள்ள தென்னிந்தியப் புலவர்கள் தமிழ் நாடாகிய யாழ்ப்பாணத்தைத் தரிசித்து அறிவுச்சுடர் கொளுவிப் போதல் வழக்கம். அங்ஙனம் வரும் புலவர்களுக்கு வரவேற்புரைகளும், பாக்களும் எழுதிப் படித்துச் சிறப்புச் செய்வது மரபாகி விட்டது. பெரும்பாலும் புலவரவர்களே தென்னிந்தியப் புலவர்களுக்கு வரவேற்புப் பாமாலைகள் பாடிச் சிறப்பிப்பார்கள். அவர்களுட் சிறப்பானவர்கள் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள், காந்தியடிகள், திரு. வி கலியாண சுந்தரனார், சட்ட நூலறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. செந்நாப் புலவர் சேதுப்பிள்ளை, நாவலர் சோம சுந்தர பாரதியார், விபுலானந்த அடிகள், சைவ சித்தாந்த சமாசத் தலைவர் பாலசுப்பிரமணிய முதலியார், சிவக் கவிமணி சுப்பிரமணிய முதலியார் என்போராவர்.

புலவருடைய வரவேற்புப் பாக்கள் ஒவ்வொன்றும் தனியழகுடையது. ஒன்றைப் போல மற்றையது இராது. அவைகள் புத்தம் புதிய கற்பனைகளும் சொல்லழகுகளும் நிரம்பி யிருப்பன. இந்நாளிலே வரவேற்புப் பாக்கள் எழுதும் வித்துவான்களிற் பலர் புலவருடைய பாடலடிகளிற் பலவற்றைப் படி

செய்து எழுதிப் பொன்போலப் போற்றி வருகின்றனர்.

## புலவருடைய முதுமை

புலவருக்கு இப்போது எழுபத்தைந்து வயது நடக்கின்றது. இடையிடையே தொய்வுநோய் வருத்துகின்றது. என்றாலும் அவர் பாடல் செய்வதும் படிப்பதுமாய்த் தமது பொழுதைப் போக்கிக் கலாவிநோதராய் விளங்குகின்றார்.

# மருதன் அஞ்சலோட்டம்

## (திரு. க. சோமசுந்தரப் புலவர்)

### காப்பு

வையமகிழ் மணியிலங்கை மங்கலநாள் விழவில்
மருதனஞ்ச லோட்டவர லாறுதமிழ் செய்யத்
தெய்வமொழிப் பாமடந்தை சேவடிகள் நாளும்
சிந்தைமிசை யேயிருத்தி வந்தனைசெய் வோமே.

### நூல்

### மருதன் ஓட்டம்

மருத னஞ்ச லோடுவோம்!
மருத னஞ்ச லோடுவோம்!
மாவி லங்கை நகரில்வாழ்
வாலி பர்கள் நாங்களே!!

எடுத்த காலி லாண்மையும்
இட்ட காலிற் றாழ்மையும்
மடுத்துப் பிடித்த கைகளில்
மான மூக்கம் பூண்டுநாம் மருதன்

அகத்தி லின்ப மூறவே
அடிமைக் கட்டுப் பாறவே

செகத்தி லீழ ஞாயிறு
திகழ வூக்கம் பூண்டுநாம் மருதன்

நங்கை மாரும் வம்மினோ
நயனம் போல மேவிநாம்
எங்கள் இலங்கா தேவிக்கே
இதயங் கொண்டு சேவிக்க மருதன்

அன்று கண்ட ஆட்சியை
அமருப் இகலு மின்றியே
இன்று பெற்றுக் கொண்டதால்
இதயம் பொங்கி மகிழநாம் மருதன்

தெய்வ லங்கை விடுதலை
தேனைப் போலி னிக்குமே
உய்வை நல்கு முண்மையால்
உயிரைப் போலு மென்றுநாம் மருதன்

வடபால் குணபா லோடுவோம்
வண்மை நுண்மை நீடவே
குடபால் தென்பால் ஓடுவோம்
குணமும் நலமுங் கூடவே மருதன்

வெற்றி வெற்றி வெற்றியே
வீர லங்கா தேவிக்கே!!
செற்ற மின்றி ஒருவராய்ச்
செகத்திற் றிலக ராகநாம் மருதன்

தந்தை யெம்மி லங்கையே
தாயு மெய்மி லங்கையே
இந்த நாட்சு தந்திரம்
எங்கள் கையிற் சேரவே மருதன்

வேறு

மண்ம திக்க விண்ம திக்க மாதி ரம்ம திக்கவே
வலிமி குந்த மறுபு லத்து மன்ன ரும்ம திக்கவே
எண்ம திக்கு மீழ மக்கள் யாவ ரும்ம திக்கவே
என்ற மருத னஞ்ச லோட்ட மின்று
யாங்க ளோடுவோம்.

பொருவு வறுமை யெளிமை கழியப்
புவியில் வாழ்வு பெருகவே
புகழும் பெருக வறமும் பெருகப்
புதிய கலைகள் பெருகவே
மருவு முருவுந் திருவும்பெருக
வலிமை பெருக நாடொறும்
வண்மை பெருக விளைவு பெருக
மருத னோட்ட மோடுவோம்.

வேறு

## வழிக்காட்சி

மரகதக் கலாபம் வீசி
மயில்க ளாடு மழகுபார்!

மந்தி வந்து குந்தி யுந்தி
மாத்திற் பாயும் வடிவுபார்!!

சேன நாயக னுக்குடைந்த
தெவ்வர் வெருண்டு மறைதல்போல்
மானி னங்கள் மருண்டு நோக்கி
மறையு மந்த வண்ணம்பார்!!

மன்னர் மன்னன் பராக்கி ரம்ம
வாகு போரில் மருவலர்
முன்னி யோடு மோட்டம்போல்
முயல்க ளோடு மோட்டம்பார்!!

பரியு மரச தந்தி ரர்கள்
பக்கம் பார்க்கும் பார்வைபோல்
நரியுங் கடைவாய் நக்கி நின்று
நாடும் பக்கப் பார்வைபார்!!

செல்வன் சேன நாய கன்னைச்
சேரார் நிமிர்ந்து குனிதல்போல்
நெல்வயலிற் சாலிக் கதிர்கள்
நிமிர்ந்து விளைந்து குனிதல்பார்!!

பலமு யர்ந்த வாங்கி லர்க்கெம்
பாரிற் பற்றுப் பறிதல்போல்
நிலையு யர்ந்த மாம ரங்கள்
இலையு திர்ந்து நிற்றல்பார்!!

புத்து ணர்ச்சி யரும்பி யின்பம்
பூத்து நிற்கும் மக்கள் போற்
பொற்ற ருக்கள் புதித ரும்பிப்
பூத்து நிற்கும் புதுமையார் !!

வேறு

உருக்கு வாள்கொண் டுலகினைக் காக்கு
மூயர்ந்த மன்னவர் போலிரு பாலுங்
கருக்கு வாள்கொண்டு காசினி காக்குங்
கற்ப கத்தரு வாமெங்கள் பனையே.

விண்ணில் மேவு கற்பக தாருவில்
விளையு நற்பய னுக்கள வில்லை
மண்ணில் மேவுமெங் கற்பக தாருவில்
மருவு பயனெட்டு நூற்றுக்கு மேலே.

வேறு

திங்கட் குடையுடைச் சேர னுஞ் சோழனுந்
தென்னவ னுமவ்வை சொற்படியே
மங்கல மாயுண்ட தெய்வப் பனம்பழம்
மரியாதை யற்றதோ தோழர்களே !

அந்த வமரரும் நுங்கின் சுவைகாணில்
அமுதங் கடைந்திட மாட்டார்கள்
சுந்தர மானப ழத்தின் சுவையினைச்
சொல்ல முடியுமோ தோழர்களே !!

வேறு

தாளை ருந்திய நீரமு தாக்கித்
 தலையை ருந்திட வீவது போலச்
சூழ்க ரும்முகி லுப்புநீ ருண்டு
 தூய நீர்மிகச் சொரிவது பாரீர்!!

பூங்கு றிஞ்சி முகட்டினி லேறிப்
 பொழிந்த தெள்ளமு தாகிய வெள்ளம்
பாங்கி லாத பரத்தையை நாடிப்
 படரு வோரிற் படர்வது பாரீர்!!

முன்னை பூத்திடும் முல்லையிற் போகும்
 முளரி பூத்திடும் மருதத்திற் போகும்
புன்னை பூத்திடு நெய்தலிற் போகும்
 போகும் போகுந் துறைபல பாரீர்!!

தணிவி லாததன் சுதந்திர வோட்டம்
 தடுக்கச் சூழ்ந்த தறிந்தது கொல்லோ?
மணிவ ரன்றி மரங்க ளுருட்டி
 மாவலி கங்கை யோடுதல் பாரீர்!!

மங்க லந்திகழ் மாப்பிள்ளை மார்வர
 மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்
பொங்கு வெள்ளப் புதுமணை நீர்வரப்
 புரளு மீனெதிர் போவது பாரீர்!!

வேறு

அடுக்கு ரெண்டு குடைகள் பிடிக்க
ஆல வட்டந் திருக்கை யெடுக்க
நடுக்குஞ் சுறவு நாந்தக மேந்த
நல்ல கணவாய் கவரி யிரட்ட.

மூன்னே யாமை பரியஞ் சுமக்க
மூரல்கள் சின்ன மூதி நிற்க
மன்னு திரைகள் முழவி யம்ப
வாரி மணக்க வருதல் பாரீர்!!

வேறு

உடன்று பிளிறிடும் வாரணமே!
ஓர்ந்து கூவிடும் வாரணமே!
விடங்கர் தாவிடு மாவினமே!
வெருண்டு தாவிடு மாவினமே!!

ஒருங்கு காவிடுங் கொடியினமே!
உயர்ந்து தாவிடுங் கொடியினமே!
மருங்கு மாமலர் பலவினமே!
மடிந்து தாழ்வது பலவினமே!

வேறு

## இலங்கையின் பழைமை

மன்னு மிலங்கை மணிநகர் மேவிய
வளனு மரசும் மதமூ மெல்லாம்

முன்ன மிருந்த படியே யெமக்கு
மொழிகுதிர் கேட்டிடத் தோழர்களே !!
சொல்லத் தொடங்கினுற் ருேழர்க ளேயத்
தொலையாத பாரத மாகதையாம் !
மெல்லச் சுருக்கியே விள்ளிடக் கேளுமின்
வேதவி யாசனைப் போலுரைப்பேன்.

வேறு

## எங்கள் நாடு

பொன்னிலங்கும் முத்திலங்கும்
புகழிலங்கு நாடு
பூவிலங்குங் கொம்பிலங்கும்
பொழிலிலங்கு நாடு ;
மன்னிலங்கும் மலையிலங்கும்
வளமிலங்கு நாடு
வானவரும் விரும்பு மெங்கள்
மணியிலங்கை நாடு.

கலைவிளங்கு புலவர்பலர்
கவிபுகன்ற நாடு
கான்விளங்கு மாவினங்கள்
கலந்துறையு நாடு ;
மலைவுளங்கள் காட்டமல
ரயன்வகுத்த நாடு
வானவரும் விரும்பு மெங்கள்
மணியிலங்கை நாடு.

மாவண்ண விந்துமகா
வாரிதியாந் தெய்வ
வலம் புரிசூ ழுளைந்தீன்ற
வண்டரள மன்றிப்
பூவண்ணன் திருவோடு
புதுவண்ண மாடும்
பூங்காவும் போலுமெங்கள்
பொன்னிலங்கை நாடு.

விசும் பேறு மலைதோறும்
பசுங் கொண்டல் கூடும்
*விழிகுளிர மயிலாடுங்
குயில் மதுரம் பாடும்
தசும்பேறு துடிதுவள
நடைதளர வள்ளி
தமிழ் முருக னோடுவிளை
யாடிமகிழ் நாடு!

ஆதியிற் குபேரனர சாண்டதிரு நாடு [நாடு;
அதன்பின் னிராவணனும் ஆண்டதிரு
நீதிமலி விபீடண னோடியக்கர் நாகர்
நிறைவாக நெடுங்கால மாண்டதிரு நாடு!

துக்கமத னுற்பத்தி துக்கநிவா ரணமூந்
துக்கநிவா ரணவழியு முலகுதுதி சொல்ல
அக்காலம் புத்தமுனி விடுதலைக்கே யாக [நாடு!
அரும்பொருள்கள் நான்கறைய அமைந்ததிரு

*மதுரநங்கைபோலப் பாடும் என்றுமாம்.

எவ்வுலகு முள்ளகலா சாரநெறி யெல்லாம்
இங்குவந்து தங்கியிருந் தோங்கி வளர்நாடு;
அவ்வுலகி லிவ்வுலகில் விடுதலைக்கே யான்ற
அடியீடும் விருத்திகளு மமைந்ததிரு நாடு.

நீலநிற வாரிதி யுடுத்தநில மங்கை
நீடுமுயி ரோடுநனி வாழநிறை ஞான
மூலனிடை நாடியென வோதுவள நாடு;
மூவேந்தர் பாராட்ட நின்றமுது நாடு!

முன்னாட் குளக்கோடன் மூட்டுபணி கூட்டும்
மூக்கோண மலைகேதீச் சரங்கொண்டநாடு
தென்னாட்டிற் கதிரைமலைச் சிலப்பினொடு
திருவிழிகொண் டருள்தெய்வத் [மூன்று
திறங்கண்ட நாடு!

வேறு

## புத்த முனிவர் முதல் வருகை

போதி நீழலிற் போந்தருள் மாமுனி
புன்மை தீர்த்திட மும்முறை யாகவே
பாத பங்கயம் வைத்திட மெய்த்தவம்
பண்ணும் புண்ணிய நாடெங்கள் நாடே!

மணிப தித்தசிங் காசனத் துக்குமுன்
மன்னர் நாகர்வ ழக்கிட வந்தவர்த்
தணிவித் தங்குசு தந்திர மேன்மையைச்
சனங்க ளுக்கருள் நாடெங்கள் நாடே!

## இரண்டாவது வருகை

அடுத்து மாமகி யங்களை நாட்டிலே
ஆன்ம தத்துவ மாயிர நாகர்க்குக்
கொடுத்து வீடருள் கோதை கொடுக்கவே
கோபங் கட்டிய நாடெங்கள் நாடே !

## மூன்றாவது வருகை

அயர்வு தீரமூன் முமுறை கழனியி
லரசன் வேண்டி யழைத்தறங் கேட்டதி
யுயர்வி ராசம காவிகா ரையெனு
மொன்று செய்திடு நாடெங்கள் நாடே !

பூத லத்துயிர் நன்மை யடைந்திடப்
புத்த மாமுனி பேசுசு தந்திர
வேத வித்துமு ளைத்துவ ளர்ந்திட
விளைநில மாகிய நாடெங்கள் நாடே !

வேறு

புத்த முனிவரன் பரிநிரு வாணம்
புகுந்து மறைந்திடு பொன்னுளில்
வித்தக வங்க நகரிருந் திவ்விடம்
விசயனுந் தோழரும் வந்தனரே.

## விசயன் வருகை

எங்கெங்கும் விடுதலைத் தூதை யனுப்புதற்
கேற்ற முதனில மாமிலங்கை

வங்கத் தனிச்சிங்க மாகும் விசயனும்
வந்தனன் மங்கல நாளினிலே.

மன்பதை துன்பறி வாரண மார்க்கம்
வகுத்த தவமுனி தான்மறைந்த
இன்புறு மங்கல நாளினி லேவங்கச்
சிங்க மிலங்கைக்கு வந்ததுவே !

வந்தது வங்கத்துச் சிங்க மிலங்கைக்கு
வாள்வி சயனெனும் பேருடனே
சுந்தரச் சிங்கள துவீபத்தி லேயொரு
சோதி யெழுந்தது மேதகவே !!

வங்கத்துச் சிங்கன் மரபினி லேவந்த
வாள் விசய னெங்கள் மூதாதை
அங்கவன் சந்ததி யாரேயா மெல்லோரும்
அன்புடன் வாழுவோ மெப்போதும் !

சஞ்சலமு மில்லை சண்டைச் சளப்பில்லை
சகோதரர் போலவே எல்லோரும்
அஞ்ச வேண்டாமுற வாகக் கலந்துநாம்
அன்புடன் வாழுவ மெப்போதும் !

மேருவைச் செண்டா லடித்துத் திரித்தவன்
வேலையை வேலை விட்டே யழித்தோன் ;
ஆரம் பூண்ட வீர பாண்டியன் வழியிலே
அருமணஞ் செய்தனன் வாள்விசயன் !

---

* சிங்களர் தமிழர் ஐக்கியம் காட்டியவாறு

ஆரம் பூண்டவீர பாண்டியன் மாமகள்
அஞ்சொல் நல்லா ளெங்கள் மூதாட்டி
வீரஞ் செறிந்த குலங்க ளிரண்டுக்கும்
வீரர்கள் நாமொன்றாய்ச் சேருவமே !

ஆரிய பாடையை யப்ப னருளினன்
அருந்தமிழ்ப் பாடையை யன்னை தந்தாள்
சீரிய பாடைக ளோரிரண் டுங் கொண்டு
சிங்கள பாடையொன் றானதுவே !!

குலமுமொன் றேயுயர் குடியுமொன் றேநாங்கள்
கூடிப் பிறந்தச கோதரரே !!
நலமுமொன் றேயெங்கள் நாடுமொன் றேகூடி
நல்ல சுதந்திரம் நாடுவமே !!

வெற்றி விசயன் மணிமுடி சூடியே
மேதகு தோழர்க ளோடிலங்கை
முற்று மொருகுடைக் கீழே யமைந்திட
முதலர சாண்டு சிறந்தனனே !!

ஆரும் புகழுநல் லிந்தியா தேசத்தில்
ஆட்சி புரிந்தவ சோக னெனும்
பேரும் புகழு நிறைந்திடு மன்னவன்
பிரிய முடனர சாண்டனனே !!

வேறு

## மகிந்தனும் சங்கமித்தையும்

பூவுலகி லெங்கெங்கும்
புத்தபிரான் சமயநெறி
மேவிவரப் பரப்புதற்கு
விரும்பியந்த மன்னவனும்

அரியதவத் தாற்பெற்ற
ஆண்மகவு மகிந்தனையும்
திருவுடைய சங்கமித்தைச்
செல்வியையுந் தான்கூட்டி

மன்னிலங்கை நகர்புகுந்தே
மதம்பரப்பி வருகவென
அன்னவரை யன்புடனே
யனுப்பிவைத்தான் மன்னவனும்.

மற்றவர்க ளிலங்கைநகர்
வந்தபொழு தவ்விடத்திற்
செற்றமிலாத் தேவநம்பித்
தீசனிருந் தாண்டுவந்தான் !!

ஆங்கவனே யிருந்தலையாம்
அணிநகரிற் கண்டுவந்து
தாங்கொணர்ந்த புத்தமத
தத்துவம்போ தித்தனரே !!

வள்ள லெங்கள் புத்தமுனி
மாஞான மெய்த நின்ற
வெள்ளரசுக் கொம்பரொன்று
மித்திரையாள் கொண்டுவந்தாள்.

கொண்டுவந்த வெள்ளரசுக்
கொம்பையந்தக் கொம்பனையாள்
மண்டுமதி சயத்துடனே
மக்கணெறி தழைத்திடவே!

அநுராதப் பெருநகரில்
அலங்காரத் துடனுசை
மனமூற நாட்டிவைத்தாள்
மங்கையர்க்குத் தனியரசி!

அன்பரும்பி யறந்தழைத்தே
அணைவுசினை விட்டகலி
இன்பநிழல் எல்லவர்க்கும்
இன்றுதந்து நின்றிடுமே.

வேறு

## வெள்ளரசு

ஒற்றுமைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!
உறுதுணைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!

வெற்றிக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!
வேல் விழியாள் நாட்டிவைத்த
வெள்ளரச மரமே!

சீலத்திற் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!
தெய்வத்திற் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!
ஞாலத்துக் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே!
நங்கை சங்க மித்திரையாள்
நாட்டி வைத்த மரமே!

வாரத்திற் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
வாய்மைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
வீரத்திற் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
வேல் விழியாள் நாட்டிவைத்த
வெள்ளரச மரமே!

தூய்மைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
சுதந்திரத்துக் கறிகுறியாய்
நிற்கு மந்த மரமே

தாய்மைக்கு மறிகுறியாய்
நிற்கு மந்த மரமே
சங்கமித்தை நாட்டி வைத்த
தனியரச மரமே!

சொல்லாண்ட திரிபிடகஞ்
சொல்லுமந்த மரமே
துக்கநிவா ரணமார்க்கஞ்
சொல்லுமந்த மரமே
பல்லாண்டு பல்லாண்டு
வாழியந்த மரமே!
பத்தினியாள் நாட்டி வைத்த
பாலரச மரமே!!

வேறு

## அநுராதபுரம்

வெள்ளரசு மரமோங்கு மநுராத புரமே
வேந்தர்தலை நகராக மேவியது மன்றி
விள்ளுமெங்கள் புத்தமுனி தத்துவமெய்ஞ் ஞானம்
விளங்குதனி நகராயு மேம்பட்ட தன்றே.

வானளவு கோபுரங்கள் மண்டபம்பொற் கோயில்
வளமளவு புத்தபிக்கு வதிந்தருளு மடங்கள்
தேனளவு சோலைவயல் வாவிகுள மாதி
தெய்வநகரென்னவளஞ் செறிந்திலங்கிற் றன்றே.

தேசசுதந் திரநாட்டிச் செல்வநிலை நாட்டித்
திராவிடரின் சிற்பமணித் தேவகுலங் கூட்டி
வாசமலி செங்கமல வயல்கள்புடை சூழ [றே!
மன்னிலங்கை மணிமுடியாய் வயங்கிற்று நின்

நன்னாள்கள் பலகழியப் பொலநறுவை தானும்
நாட்டுக்குத் தலைநகராய் நலங்கள்பல கூட்டி
எந்நாளு மழியாத சீர்மையுடன் நிலவி [றே!
இன்றைக்குந் தொன்மைநிலை யியம்புகின்ற தன்

செல்வமலி தனிச்செங்கோ லிலங்கைமுழு தோங்கித்
தேவநம்பித் தீசனர சாண்டுபல வாண்டு
செல்லமணி யிலங்கைதனி லோரிருவர் வேந்தர்
சீருடனுஞ் சிறப்புடனு மாண்டுவந்தா ரன்றே.

## எல்லாளன்

அல்லலறக் களவுமுதற் குற்றங்கள் வீட்டி
அண்ணல்மனு நீதிமுறை யனைவருக்குங் காட்டி
மல்லல்மிகு மிலங்கைநகர் வடவெல்லை யாண்டான்
மாட்சிமைசே ரெல்லாள வாண்மன்ன னன்றே!

ஓதுமத பேதமின்றி யுயர்வுதாழ் வின்றி
ஒருகுலத்துக் கொருநீதி காட்டாம லார்க்கும்
நீதிமுறை செலுத்தியந்த எல்லாள மன்னன்
நிறைந்தசெங்கோ லறந்தழைத்து நிலவவர
[சாண்டான்.

வேறு

வீரத்துக்கு மவனே மெய்ம்மைக்கு மவனே
 மேவுசுதந் திரத்துக்கும் வெற்றிக்கு மவனே
ஈரத்துக்கு மவனே யென்று நிலந் துதிக்க
 எல்லாளத் தமிழ்வேந்த னிருந்தரசாண் டனனே.

வேறு

திருவாரூர் வீதியிலே செல்வமகன் தன்னைத்
 தேர்க்காலின் கீழ்வீழ்த்திக் கொன்றபசு வுக்கும்
ஒருவாத நீதிபுரி மனுநீதி கண்ட
 உயர்சோழ னெப்பென்ன வுரைக்குமெல் லாளன்
வருநீதி மாக்களுக்கும் மக்களுக்குங் காட்டி
 மன்னிலங்கை தனிற்றுட்ட கைமுனுவாம் வீரன்
உருவாகு முறுவென்வெளி சாயாவென் றோதும்
 ஒருதாது கோபமெடுத் தாண்டொழிந்த பின்னர்.

## விசேட சிங்கள மன்னர்கள்

உரைசேரு நாற்பானோ டாறுமுடி மன்னர்
 ஒண்டமிழர் சிங்களவ ராகமுறை நின்றே
தரைசேர வாண்டுபுத்த னருள்சமயங் காத்துத்
 தனியாழி யுலகெங்குஞ் செலுத்தவகை தந்து
விரைசேருந் தார்மகிபர் விட்டொழிந்த பின்னர்
 மேவுமகா வம்சக்கடை யரசன்மகா சேனன்
புரைசேரு நெறியகற்றிப் புகன்றசுதந் திரத்தைப்
 போற்றியர சாண்டனனென் றோதிடுவர் புலவர்.

### வேறு

கீர்த்திசிறீ மேகவண்ண னென்னு மன்னன்
கேடிலா விலங்கைதனி யாண்ட காலம்
வாய்த்தபா ரதநாட்டிற் சந்திர குப்த
மன்னனர சாண்டிருந்தா னிருநாட் டுக்குஞ்
சீர்த்திகலா சாரங்கள் மலிந்து செம்மைச்
சிகிறியாக் கலாசார சிகர மாகக்
கூர்த்தசுவ தந்திரத்தைப் பாது காத்துக்
கோலோச்சி நெடுங்காலங் குலவி னூரால்.

அந்நாளிற் பாரதத்தின் தென்பா கத்தை
அரியதிறற் பல்லவர்க ளாண்டு வந்தார்
இந்நாளில் மானுபர னென்னு மன்னன்
இசைகொள்நர சிங்கவர்ம னிடத்தி லோடி
உன்னுலா கியவுதவி செய்ய வேண்டும்;
ஒன்னுரை யோட்டியர சாள வேண்டும்!
மன்னுவென் றேயடையப் படைகள் கூட்டி
மற்றவனே யரசாள வைத்திட் டானே.

மேதகுநற் சோழமன்னர் வெற்றி யோடு
மேவுதிறை கொடுத்திலங்கை யெழுபா னுண்டு
நீதகல வரசுபுரி காலந் தன்னிற்
திறமைமிகு விசயபாக னென்னு மன்னன்
வாகுவலி யாற்சோழர் தம்மை வென்று [டான்.
மணியிலங்கை நகரைமுன்போல் வகுத்தே யாண்

பூதலத்தோர் கையெடுத்துப் போற்றும் வெற்றி
பொலிந்தபராக் கிரமவாகு புவியாண் டானே.

காவளர்த்துங் குளந்தொட்டுங் கூடு மூற்றுங்
கழனிகளா யெப்போதும் விளைவு காணப்
பூவகத்து மணியிலங்கை பொலிய மேலும்
புத்தமுதற் சமயங்கள் பாது காத்துப்
பாவகத்துப் புலவரிசை பாட வெற்றிப்
பராக்கிரம வாகுவெனப் பயங்க ணீக்கி
மேவகத்தி லுணவுபல வெளியே யேற்றி
வெற்றியுட னரசாட்சி மேவி னானே.

வேறு

## யாழ்ப்பாண அரசு

ஓதுமோ ராயிரத் திருநூற் றறுபதி
லொண்டமி ழாரிய மன்னவர்கள்
தீதறு யாழ்ப்பாண தேசத்தை மேன்மை
சிறக்க வரசாண்டு வந்தனரே.

செல்லூரும் பூம்பொழில் நல்லூர் தலைநகர்
செய்தே செகராச சேகரனும்
மல்லன் மணிமாலை மன்னவ னெங்கெங்கும்
மனுநீதி யோடர சாண்டனனே.

ஆண்டு வருங்காலை நற்றமிழ்ச் சங்கத்தை
அரச கேசரி தானமைத்துக்

காண்டகு தாசனார் செய்த ரகுவம்சக்
காப்பியத்தைத் தமிழ் செய்தனனே.

மற்றுந் தமிழ் நூல்க ளாக்குவித்தே யெங்கள்
வண்டமிழ் மாதை யலங்கரித்தான்;
இற்றைநன் னுளினு மிங்கே யொருசங்க
மிருப்பது யாரு மறிவாரே.

வேறு

## மேல்நாட்டாரரட்சி

தென்பாண்டி மன்னர்பல ரந்த நாளிற்
சீரிலங்கை நகரதனைச் செறியத் தாக்கி
அந்நாடு பலதிறனுய்ப் பிரிந்து போக
அங்கங்குந் தனிமன்ன ராண்டு வந்தார்
கொன்னுரு மேல்நாட்டிற் கல்லேத் தின்று
குருதிகுடித் திடுசாதி யென்று கூறும்
இன்னுசெய் போத்துக்கல் மாந்தர்வந்தே
இலங்கை நகர்க் கரையோர மெய்தினுரே.

வல்லமைசேர் போத்துக்கல் தேச மன்னர்
மருவுகரை யோரங்கள் மதங்கள் மாற்றிச்[ட்
சொல்லுமொரு நூற்றைம்பா னுண்டு முன்னு
சுதந்திரங்கள் பறிபோக வாண்ட நாளிற்
றொல்லேதரு மொல்லாந்த மன்னர் வந்து [க
தொலேத்தவரை யத்துணைவற் சரமாண் டே
மல்லல்மிகு மாங்கிலராம் வேந்தர் வந்து
மாசகற்றி யாண்டெம்மை மதித்திட் டாரே!

வேறு

### சுதந்திர அடியீடு

ஆயிரத் தெண் ணூற்று முப்பத்து மூன் றெனு
　மாண்டிலே தன்னர சாக்கிடவே
பாயிரஞ் செய்து தொடங்கின ரேகீர்த்தி
　பரவுந் தமிழரும் சிங்களரும்.

சீராரும் பொன்கிழார் ராமநா தன்துரை
　திருவாள னருணைசலந் துரையும்
ஏராரும் பாரன் சயதில கனுடன்
　எங்கும் புகழ்ச்சேன நாயக்கனும்.

சேரும் புகழ்மலி சமரவிக் கிரமனுந்
　திருவார் கொறியா பெரைராவும்
ஆரும் புகழுஞ் சில்வாவும் பெரைராவும்
　ஆன துரைச்சாமி யண்ணலுமே.

தந்தை பிரதமர் சேன நாயக்கன்
　சாற்றும் பிரான்சிசு சொய்சாவும்
சுந்தர ஞகிய பண்டார நாயக்கன்
　சொல்லாத வேறு பெரியோரும்.

ஆன முயற்சிகள் பற்பல் வாற்றியே
　அரசர்க்கு விண்ணப்பம் போக்விட்டார்;
மானமி குந்தொன மூர்மந்தி ரிச்சபை
　வந்து திருத்தம் புரிந்ததுவே.

ஓரா யிரத்துத்தொ ளாயிரத்து நாற்பான்
ஓரைந்திற் சோல்பரி சங்கத்தினர்
சீரான எங்கள் மணியிலங் கைக்குச்
சிறந்த சுதந்திரங் காட்டினரே.

காட்டியே பலமனுச் சேன நாயக்கன்
கருமமுங் கண்ணுமாய் நின்றுழைத்தே
நாட்டுச் சுதந்திரப் பொன்னங் குழவியை
நல்கின னேநாற்பத் தெட்டினிலே,

வேறு

## சுதந்திரப் பேறு

ஓராயி ரத்துத்தொள் ளாயிரத்து நாற்பான்
ஓரெட்டா மாண்டுயர் கும்பமதி
சீரான நாலாந் தேதிசு தந்திரச்
செங்கதிர் வந்துதி கழ்ந்ததுவே.

ஆனந்தச் சேவல்க ளெங்கெங்குங் கூவின !
அடிமை வறுமைக ளந்தரம் போயின !!
ஊனந் தவிர்ந்தது சுதந்திரச் சூரியன்
உதித்தன னுள்ளங் குளிர்ந்ததுவே.

மங்கல தூரிய மெங்கு முழங்கின !
வயிரிய மார்த்த மணியொலித்த !!
சங்க மியம்பின பீரங்கி தீர்ந்தது
சங்கடந் தீர்ந்தது தீர்ந்ததுவே !!

முன்னாட் குளக்கோடன் மூட்டுந் திருப்பணி
மூர்க்கப் பறங்கியர் கைப்புகுந்தே [போய்ப்
பின்னாட் பூனைக்கண் செங்கண் புகைக்கண்
பிறகு மெங்கள் கைப் போந்ததுவே.

பூரண கும்பங்க ளெங்கெங்கும் வைமின்கள்!!
பொன்னின் விளக்குக ளேற்றுமினோ !!
தோரணந் தூக்குமின் வாழை கமுகுகள்
தூமலர் மாலைகள் நாற்றுமினோ !!

எங்கெங்குங் கொண்டாட்ட மெங்குங் குதூகல
மெங்கெங்கு மானந்த மானந்தமே !
எங்கெங்கு மெங்கள் சுதந்திரப் பொன்விழா
இன்று மலிந்து பொலிந்திடுமே !!

தேவாலயங்களில் பூசை திருவிழாச்
சேர நடப்பது பார்மின்களோ !
தூவாரும் புத்த குருமா ரிடந்தோறும்
துதித்து மகிழ்வது பார்மின்களோ !!

ஏழை களுக்கன்ன தான மிடுமோசை
ஏற்போ ரிடுவோ ரிடுமோசை
மாழை யொண் கண்ணிய ராடல் பாடல்சுப
மங்கல வாழ்த்து மலிந்திடுமே

சோபனஞ் சோபனஞ் சோபனமே சுப
சோபனஞ் சோபனஞ் சோபனமே !!

நாவளஞ் சேர்கவி வாணர் துதிசெய
நாடு சுதந்திர மானதுவே !!

சேனை படையின்றிச் செற்றஞ் சமரின்றித்
தேச மிரத்தமுஞ் சிந்தாமல்
மான மிகுந்திடுஞ் சேன நாயக்கன்
வாங்கினனே சுய ராச்சியமே !

செல்வச் சுதந்திர வைப வத்தைநா லு
திசையினுஞ் சேர்ந்தவர் நன்கறிய
மல் லன் மிகுந்திடு மருதனஞ்ச லோட்டம்
வைத்தனர் புத்தி மிகுந்தவரே !

## கொழும்பு மாநகர்

துணியு மொருமை யுடையி னழகு
சுடர்கொள் தொப்பி கவசமும்
சுழலும் விழியு மழகு பழகு
துணிவு நடையும் வலிமையும்
அணிகொள் நிரையு மமைய மனதி
லதிக மகிழ்வு புதிதுற
ஆடிப் பாடி வீரர் நகரும்
ஆர் வாரம் பார்மீனே !

இசைக்குப் பொருந்தச் சகித்து மிதிக்கு
மெழில்கொள் நடையு மிடையிலே

எடுத்துத் தொடுத்த கடுத்த சுடிகை
ஏந்து கரத்து வெடிக்குழல்
அசைத்துக் கொடுத்து நெளித்து வளைத்துக்
களித்துத் திளைத்துச் சுதந்திரம்
ஆடிப் பாடி வீரர் நகரும்
ஆர வாரம் பார்மினோ !!

வேறு

வந்து சுதந்திர மின்று புகுந்தது
மன்பதை யின்புறவே !
மங்கல மெங்கு நிறைந்து சிறந்தது
மன்றுக ளெங்கணுமே
சந்த மிகுந்திடு சங்கு முழங்கின
சல்லரி மல்லரியும்
தங்கள் திருத்தளி முன்றில் வழங்குவ
தங்கு மணிக்குலமே

அன்பு கசிந்து சுரந்து பொழிந்திட
அஞ்சொல் வளம்பெறவே
அங்கு மிகுந்த விதம்பெறு பாடல்கள்
அன்பர் விளம்பிடவே..
இன்ப மிகுந்திட வெங்கள் சுதந்திர
மின்று புகுந்ததென
எங்கு மிதம்பெறு மங்கல கும்ப
மெழுந்து பொலிந்தது பார் !!

வேறு

கேடில் விடுதலை யான தெனுமொழி
கேள்வி வழிபுகுதா
நாடு விடுதலை ! நாடு விடுதலை !!
நாளும் விடுதலையே !
பாடை விடுதலை ! கூறு மத வழி
பாடு விடுதலை ! யென்
றோடி விடுதலை பாடி மகிழ்பவ
ரோதை நிறைவொருபால்.

வாழி விடுதலை தந்த பிரதம
மந்திரி யார் வாழி !
வாழி விடுதலை கோலி யடியிடு
மான பிரமுகர்கள் !
வாழி யவரொடு கூடி யருளிய
மாசி லரசினரும் !
வாழி தலைமுறை வாழி யெனவரும்
வாழ்வு தருமுரையே !

வேறு

பூரண கும்பம் பாவை விளக்குப்
பொற்பா லிகையொருபால்
தோரண மாவண காவணமெங்குந்
தூண்டா வொளியொருபால்

வாரணி கொங்கையர் நாண்பெரு மங்கல
மாசில் குழுவொருபால்
ஆரண மந்திர வந்தணர் பிக்குக
ளாசி யொலியொருபால்.

வேறு

அதல விதலமு முதல வுலகமு
மமரரு லகமும திரவே
பதிகொள் மனிதர்கள் செவிகள் செவிடுற
பரிய வெடியொலி வருமே
நிதிகொள் தனதனு மமரர் தலைவனு
நிலைகள் குலைதர வெருவா
திதிகொ ளிறைவனு மறுக வதிர்தரு
திமில குமிலமு மொருசார்.

வேறு

இந்திர னேமுத லெண்டிசை வானவ
ரெங்களி லங்கைநகர்
இன்றுசு தந்திர மென்றும னம்புரி
இன்பநி றைந்திடவே
ஐந்துவி தம்படு மங்கல தூரிய
மங்குமு ழங்கிடவே
அன்றும லர்ந்தசு கந்தமி கும்மல
ரங்குசொ ரிந்திடவே.

## காற்பந்தாட்டம்

கைய கந்தொடா திரண்டு
காலக கங்க ளுந்தவே
கனக வரையை மருவு புயங்கள்
கதிகொள் செலவில் முட்டவே
வைய கம்மெ னத்தி ரண்ட
வட்ட மான கந்துகம்
வாலி பர்க ளோடி யடிக்கும்
வண்ணம் பாரும் பாருமே!

நெற்றி வேர்வை முத்துப் போல
நிரையி னோடி யரும்பவே
நின்றும் இருந்துங் குனிந்தும் வளைந்தும்
நேரார் தங்கள் வலிகெட
மற்றுந் தாங்கள் கற்ற கற்ற
மாற்ற மாறு ருவகை
வாலி பர்கள் பந்தை யுந்தும்
வண்ணம் பாரும் பாருமே!

## கைப்பந்தாட்டம்

இலக்க ணந்த வாதவு
ரெடுத்த பந்தை வீசியும்
எறிந்த பந்தைக் கருவிகொண்
டெதிர்த்தெ றிந்தங் கோடியும்

பலக்க வெற்றி யுற்றிடப்
படர்ந்து நின்று பற்றியும்
பயின்ற கைப்பந் தடிக்கும் வித்தை
மேலும் பாரும் பாருமே !

வேறு

## பெண்கள் பந்தாட்டம்

கரிய முகிலின மனைய புரிகுழல்
கலைய விழியயி லுலையவே
கலப மயிலென நடன விதமொடு
கமல பதயுக முளையவே
அரிய கலைமுறை பயிலும் விதிமுறை
யணுவு மொருபிழை யகலவே
அவனி வருமர மகளி ரிவரென
அறையு மழகிய ராடல்பார் !

மதிய மெனவுரை வதன நுதலினில்
மணிகொள் தரளநல் வடமென
மருவு வெயர்வுற விழிகள் சுலவுற
வனப வளவிதழ் ஒளிவிடச்
சதிகொள் நடைபயில் சரண முளைவுறத்
தனது பகுதியும் விறலுறச்
சலச மகளென வுரைகொ ளழகியர்
தமது திறனுட னுடல்பார் !

வேறு

## இலங்கை ஆக்கம்

வாரும் வாரும் தோழரே
மருத னஞ்ச லோடுவோம்
தேரு முரிமை பாடுவோம்
தேனும் பாலும் போலவே—(மருதன்)

உடையில் நடையி லொருவரை
யொற்றிச் சென்று பணிவமோ?
படையிற் கலையி லொருவரைப்
பற்றி நிற்கத் துணிவமோ —(மருதன்)

அஞ்சு விர லுஞ் சேர்ந்திடில்
அரிய கருமம் புரியலாம்
கொஞ்ச மொன்று நோவுறிற்
கூடுங் கரும மில்லையே —(மருதன்)

வெட்டு வந்து வீழினும்
விழிகள் மூடா வீரமும்
திட்ட மான வுறுதியுந்
தேட வேண்டுந் தோழரே —(மருதன்)

நல்லொ ழுக்க மெம்முயிர்
நன்றி நல்குங் கற்பகம்
நல்லொ ழுக்க முள்ளவர்
நாட்டிற் புனித தேவரே —(மருதன்)

காட்டிற் றூர்ந்த வாவிக்குங்
கனகம் விளைந்த வன்னிக்கும்
மீட்டு முரிமை பெற்றதை
விநய மாகச் சொல்லவே —(மருதன்)

பழமை வாழ்வு கண்டதும்
புதுமைத் தாழ்வு விண்டதும்
கிழமை கொண்ட தோழர்க்குக்
கிளந்து சொல்லிப் புல்லவே-(மருதன்)

சிந்து மிந்து மாகடல்
சின்ன பின்ன மாகவே
வந்து பண்டம் யாற்றிடும்
வங்க வாரி காணவே —(மருதன்)

தலைமி மிர்ந்து நின்றுபின்
தாழ்ந் தழுந்து தாசராய்
நிலைத ளர்ந்த தலைவரின்
நேர்மை யின்மை காணவே —(மருதன்)

பொய்யும் புளுகும் பேசியே
புரட்சி நாட்டிற் செய்துபின்
தெய்வங் கொல்லும் கொள்கையர்
தேம்பி நின்று சாம்பவே —(மருதன்

வேறு

ஆயுள் வேதர் காலக் கணிதர்
சிற்ப நூல ராவமே

அடவி கொன்று வீடெழுப்பி
ஆங்கிருக்கப் போவமே
மேய பஞ்சு நூலி லாடை
வன்னம் பன்னி நெய்வமே
வேற்றுப் புலத்தர் நாண வினைகள்
வேறு நூறு செய்வமே —(மருதன்)

காடு கொன்று வாவி தொட்டு
மேழிச் செல்வங் காண்குவம்
கழனி தோறும் விளைவு கண்டு
கலத்தி லேற்றி யுலகிலே
நாடுந் துறைக ளோடிச் சென்று
நல்ல நிதியங் கூட்டுவம்
நலிக்கும் பஞ்சங் கெஞ்சி யோட
நாட்டிற் ெருழிலுங் காட்டுவம்(மருதன்)

சிங்கக் கொடியும் நந்திக் கொடியும்
செகத்தி லோங்கத் தூக்குவம்
தெய்வத் தமிழைச் சிங்க ளத்தைத்
தேச மொழிக ளாக்குவம்
எங்கள் சாதிப் பழைமை பெருமை
எவர்க்குஞ் சென்று சாற்றுவம்
எம்மில் யாருஞ் சிறிய ரல்ல
ரென்று நின்று போற்றுவம் -(மருதன்)

இந்தி யாவி னின்று வந்தே
ஈழ நிதியங் கூட்டிடும்

இளைய தமிழர் முதிய தமிழர்
 இனிய நண்பர் சோனகர்
வந்து சேர்ந்த பறங்கி மக்கள்
 வங்கச் செல்வர் சிங்களர்
மாறி லாது சிறுமை நீங்கி
 வாழ்க என்றே யோடுவோம் -(மருதன்)

கீழை நாட்டுத் தெய்வக் கலையும்
 கிளரும் மேலைக் கலைகளும்
கேடி லெங்கள் சமய வாய்மை
 கிளக்கு ஞான தத்துவம்
வாழி தமிழிற் சிங்களத்தில்
 வளரு மிரண்டு கழகங்கள்
வடபால் தென்பா லமைக வென்று
 வாழ்த்துக் கூறி யோடுவம் -(மருதன்)

வேறு

## சுதந்திர சதுக்கம்

வடபாலி லேபருத்தித்
 துறையதனி னின்றும்
வயங்குகுண பால்மட்டக்
 களப்பினிலே நின்றும்
குடபாலிற் காலிமுகத்
 துறையினிலே நின்றும்
கூறுதென்பா லிற்றெய்வந்
 துறையினிலே நின்றும் —(மருதன்)

ஓடுகின்ற மருதனஞ்ச லோட்டமெலா மொன்றாய்
ஓரிடத்தி லேயொன்று பட்டுமுடி வாகக்
கூடுகின்ற சுதந்திர சதுக்கத்தி லோலை [வோமே
குதூகலத்தி னோடுசென்று கொடுத்து மகிழ் -
—(மருதன்

தொடுத்தவஞ்ச லோட்டமது முடியுமிட மான
சுதந்திர சதுக்கமிதோ தோன்றியது பாரீர்!!
எடுத்தசுரு ளேற்பவர்கள் கைக்கொடுத்து நாமும்
இளைப்பாறு வோமினிநா மிளைப்பாறு வோமே
—(மருதன்)

## வாழ்த்து

வேறு

வாழியெங்கள் சுதந்திரநாள் மருதனஞ்ச லோட்டம்
வகுத்தமுதல் மந்திரியும் ஏனையரும் வாழி!
வாழியெங்கள் சுதந்திரஞ்சேர் மணியிலங்கை நாடு
வாழிதமிழ் சிங்களமும் வழிதோறும் வாழி!!

மன்னுமழை பொழிந்திடுக வாவிகுளந் தேங்க
வயல்விளைக நென்மலிக வறுமைபிணி நீங்க
சொன்னபல தொழில்முறைக ளெங்கெங்கு மோங்க
துயர்நீங்கி யனவரதஞ் சுதந்திரமும் வாழ்க.

முற்றிற்று